Messrs. A. Shivagurunathan of the Chief Accountant's Office, V. Nagalingam of the C.E.W. & W. Office, E.T. Kandiah of the P. & T. Stores, S. Krishnapillai of the D.S. Office, M.A. Saravanamuthu of the C.M.E's Office, P. Sathasivam of the S.S. Office and S. Arumugam of the G.M.R. Office have proceeded to Ceylon on leave.

Messrs. T. Ponnudurai of the Loco Store, Prai and N. Arulanadam, Goods Office, Tapah Road, have come on transfer to the Division Supt's Office.

Messrs. K. Chinnadurai and S. Kathiravelu of the D.S. Office have been transferred to Taiping and Port Swettenham respectively.

Mr. S. Sinnathambar of the Drainage and Irrigation Department and a member of the District Committee of the Imbi & Pasar Roads Area, for a number of years, was entertained at dinner at the Coliseum Cafe on 6th June, 1937 on the eve of his transfer to Taiping. A very large number of his friends attended the function. He was also entertained at Tea by Mr. K. Murugasu of the Works & Buildings, P.W.D., at his quarters on 10th June, 1937

NEGRI SEMBILAN.

Seremban.

The infant son of Mr. & Mrs. K. Vetti velu, Health Office, Seremban, died in Seremban Hospital on 20. 6. 1937. Our heartfelt condolence to the bereaved parents.

Mr. & Mrs. V. Velautham of the Labour Office, Seremban, are blessed with a son.

The children of the Bala Sangetha Sabha gave a very successful performance on 12. 6. 1937. There was a record crowd—more than half of the seats being occupied by ladies.

The members of the General Clerical Service stationed in Seremban assembled at the Vivekananda Students' Hall, on 16. 6. 1937, to consider and put up recommendations to the General Clerical Service Association, Kuala Lumpur, for transmission to the Commission inquiring into the Temporary Allowance question. Mr. R. Nagaratnam, Office Assistant, N.S. Secretariat, presided.

PAHANG.

Kuala Lipis.

Mrs Kandiah wife of Mr. K. Kandiah, Financial Assistant, P.W.D. and children have returned from Jaffna where they had been for a change. Mr. Kandiah, Financial Assistant, P.W.D., is one of the recipients of the Coronation Medal.

Dr. P.K. Menon, who was in charge of Mentakab Hospital has come on transfer and Dr. K.T. Natarajan has gone to Kuantan.

Mrs. Somasundram, wife of Mr. R. Somasundram, Teacher, Clifford School, Kuala Lipis gave birth to a daughter. Both the mother and the child are well.

Mr. A Kanagalingam, Senior Hospital Assistant, is an inmate of the General Hospital.

The Madura Sri Paramananda Paskaragnana Original Boy's Company, on their

tour in Malaya visited Kuala Lipis in May and staged five plays from classical works and novels. They left for Rawang after staging several plays at Raub.

The Pahang Police Sports were successfully held on the 5th June, 1937 when the F.M.S. Police Band from Kuala Lumpur was in attendance.

The Birthday of His Majesty the King was celebrated on the 9th June, 1937, the important items on the programme being Parade in the morning and Garden Party at the Residency in the evening. The M.V.I. band from Pekan was in attendance both at the parade and the garden party.

Kuantan.

Mr. S. Chelliah, Health Inspector has returned from Ceylon and resumed duty.

Mr. K. Vyramuttu of the District Office and, a member of the J.C.S. Ltd., has gone on transfer to the Education Office, Raub.

We very much regret to record the death of the infant son of Mr. V. Rasiah, Headmaster, Government English School Kuantan and President of the Kuantan Tamil Association on the 9th of June after a brief illness. The child was suddenly taken ill on the previous night and was admitted into the District Hispital on the following morning. At mid-day the condition of the child was thought critical, despite all efforts to save his life he passed away peacefully at 12: 30 p.m. The funeral took place the same day at 5 p.m., and those attended included Messrs. C.S. Kandiah (Chairman of the Kuantan District Committee, J.C.S. Ltd.). M. Sockalingam Chettiar, J.P., R. Thambiah, Edgar Joseph, Pius Vendargon, Dr. K. Natarajan, S. Nagalingam, and Towkay Chong Nang. Our sympathies are with the grieved parents.

We are glad to learn that the elder children of Mr. & Mrs. Rasiah who were also laid up have since fully recovered.

Raub.

The engagement is announced between Mr. A. Sinnathamby, District Office, Raub, and Miss. K. Thavanayaki, eldest daughter of Mr. K. Kandiah, Financial Assistant, P.W.D., Kuala Lipis. The marriage will take place in August next. Mr. A. Sinnathamby is an ardent member of the Society and we offer our congratulations to him.

Temerloh & Mentakab.

Mr. and Mrs. K. Kanagaratnam and children were seen off by their many friends and well-wishers on Sunday the 20th June, 1937 by the morning mail to Singapore enroute to Jaffna.

Mr. M. Chellathurai of the District Office, Temerloh has proceeded on short leve.

Both the two sons of Mr. and Mrs. A. Mailvahanam who were victims of malaria during the last two weeks are now convalescent.

Mr. and Mrs. N. Veluppillai of Mentakab entatained their friends on Saturday, the 26th June, 1937, being the first aniversary of their marriage.

Correspondence.

(I)
Scholarships And Professions

(To The Editor, The Pathfinder.)

Sir,—Referring to the correspondence by a "*Member*" which appeared in the June issue of your very widely circulated journal regarding the offer of a Scholarship tenable at the King Edward VII Medical College, Singapore, is it to be understood that when the scholar becomes a full-fledged doctor at the end of the requsite period of six years, he will be available for every member of the Society for free service or will he be one who will say," I cannot find the time. Send the child to the Hospital?"

May I, dear Editor, suggest to you that not only this Scholarship but any other Scholarships offered by the Society be granted under certain well-planned-out conditions which will ultimately be remunerative to the Society and will enable it to multiply the number of such Scholarships and thus keep up the usefullness and continuity of the links in the chain of Scholarships.

A Co-operative Society should not solely exist for promoting charity of an unremunerative nature, but there should be an economical basis on which it is given. The action must be mutually beneficial to both the giver and the receiver. Here one supplies the capital and the other the brain. Anv profit derived therefrom must be to benefit both. So, could it not be that a scholar, thus assisted, when turned out and occupying a position, which he could not have dreamed of achieving otherwise, makes it a point to return to the Society a portion, or the whole of the funds spent on him to promote further Scholarships? It can be. A qualified doctor, a trader or an garaiculturist drawing an initial salary or income of $250|-, $100|- or $75|- respectively will be able to contribute from 10 to 25 per cent of his income to the Society for providing him the means for acquiring such income.

I do not consider, and I am sure that the scholar himself will have no room to consider, that it is a heavy burden imposed on him. If this be the condition under which Scholarships are granted I am sure the Society can turn out not one doctor, one trader, one agriculturist but thirty and sixty and hundred.

May I also find out from you, among the many scholars who were turned out by the Society hitherto, how many of them are members and what per centage of their monthly salary or income they are contributing to the Society?

By the by, dear Editor, I have noted—not once or twice—that one of the conditions laid down for the impending candidates for the scholarships is that they must be "local born and locally eductaed". One is really at a loss to understand how a community, which wails over such conditions laid down by the Malayan Administration, can tolerate such a suggestion. Is it wrong for a brother or a nephew of one, born and educated in Jaffna or in any other place, to benefit by these Scholarships when one has been a member of the Society for more than ten years and contributed substantially to all the funds of the Society? I think, perhaps, the local schools and colleges want that qualification. If so, there is no question on that.

It is not sound economy to give away all the time without the wherewithal to replenish that drainage. Giving alone makes one a bankrupt.

Yours etc.,
M. A. N.

Kuala Lumpur,
21st June, 1937.

(II)

Congratulations!

(To the Editor, The Pathfinder)

Sir,—I congratulate you and your managing committee on their very commendable foresight and prompt action in producing this journal which has been a long-felt need for our community. I must thank Mr. R.N. Thamby-Thurai for inviting me to contribute to its columns, and although I gave him a ready promise, I must apologise to him for this rather late response. In fact I still have with me a long article I drafted for publication in the first issue, but many unforeseen circumstances have hitherto interfered with my intentions.

In the meantime I have read with great interest the many contributions from our countrymen. I congratulate them on their patriotic efforts, and it is my sincere hope that they will continue with their contributions and the readers with their support. I welcome the arrival of lady-contributors, they must be encouraged.

Regarding the standard of the journal the few spelling and grammatical errors inseparable from a first attempt have been pointed out, but the subsequent two issues compare favourably with most amateur publications. I would however suggest to include a few judiciously selected photographs in each issue, and to devote a few pages for sporting activities of our community, and a summary of the activities and important events affecting our community that have occurred in Ceylon between the dates of the previous and current issues of this journal.

I would like to appeal to our brethren and sisters to receive the opinions expressed in this journal in the best of spirit and as opinions, if somewhat direct and damaging at times, of compatriots who have been actuated by strong feelings and a strong desire to help to reform our community. However well the cap may fit, let us never enter into personalities, but endeavour to co-operate by correctnig in us those faults for which we have been taken to task. We must in fact, thank those who have taken the trouble to point out to us our defects, and the best way to do that is by making ourselves acceptable.

In reply to the *Editor* on the subject of providing, nay extorting, dowries my answer is a vehement condemnation of the practice, and I propose to deal with the subject exhaustively in the next issue of the *Pathfinder*.

Regarding "Better Living Societies" I am forwarding for publication an article entitled "New Life Movement" which I had written long before the third number of the *Pathfinder* reached me. We don't want any more societies: we have too many of them which have not achieved anything worth the while. What we really want is a movement—a change of heart, not societies and associations, and meetings and resolutions that have seldom been put into effect. We want a movement for reforms just like a movement of the atmosphere, commonly known as wind, which sweeps everything before it and whose effects are felt far and near, within and without.

I am afraid I have encroached very much upon your space, but I am actuated by the best of motives to work for the improvement and progress of our community.

Yours etc.,
S. SELVANAYAGAM.

Taiping,
20.6.1937.

iii

Dowry System

The Editor, Pathfinder.

Sir,—Hardly a year has passed since an unsuccessful attempt was made to organize a meeting in K. Lumpur in order to denounce the Ceylon State Councillor, who proposed to abolish the dowry system by legislation. In the heated discussion that followed in The Malay Mail, in which it was my privilege to express the view of the younger set, one fundamental fact that emerged was that the commity in general is fully conversnat with evils of the dowry system as perpetrated in Jaffna and in S. India, and secondly, a mere academic discussion of the pros and cons of this problem, instead of serving any useful purpose, would only create mutual recrimination, bitterness and rancour among the contestants. Owing to this reason, for the present at least, I intend to confine this letter to the elucidation of one aspect of the question namely, how we could get rid of this archaic custom without necessrily dividing the community into two opposite parties.

Young as we are, we do realise the importance of obtaining the tacit consent of all people for the success of any social reform. This approval will undoubtedly be forthcoming, if an evolutionary and not a revolutionary method is suggested. The proposal of one of the Ceylon State Councillors making illegal the award of dowry is not a right remedy in that it is revolutionary in conception and, therefore, our orthodox elders will never give their general support without which no social change is possible at this jucture.

It would also be appreciated that the mere giving of dowry itself is not harmful but what is detérimental is that the bargaining and haggling of the amount of dowry—especially when the prospective bridegroom happens to be a doctor, lawyer or a teacher—sets no reasonable limit to what the parents could willingly give without jeopardizing their interests and that of other children. Obvioulv, if all the people had been really educated—I mean the word in the right snese—then this contemptible and niggardly bargaining which forms the root of all evlis would have disappeared long ago. As it is, the only possible alternative is to devise a method which, while retaining the dowry system, would minimize its drawbacks. In other words, the remedy adapted should be a compromise incorporating the views of the two parties, and, at the same time, imparting a new vitality to the present system, so that it can serve the needs of the people at the present time.

This can be accomplished by giving the inheritance to the boys and to the girls in equal shares so that the latter would still obtain a dowry but in a different name and the amount of which is automatically fixed proportionate to the number of children the parents have. With suitable legislation, this practice can be enforced easily for the benefit of the whole community whose interest is of more national importance than that of a few human sharks in the form of doctors, lawyers etc., grown fat out of our mothers' money.

Yours etc.,
G.G. CHERIAN.

Kuala Lumpur

Sayings of Wisdom.

Whence comes happiness? From tranquillity and self-control.

Men without self-restraint drift before their passions like rudderless boats before the wind.

Bhagvat Gita

* * *

Men talk as if victory were something fortunate. Work is victory.

Wherever work is done, victory is obtained.

Shakespeare.

* * *

Oh, many a shaft, at random sent,
Finds mark the archer little meant'
And many a word at random spoken,
May soothe or wound a heart that's broken.

Sir W. Scott.

* * *

The noblest thoughts my soul can claim,
The holiest words my tongue can frame,
Unworthy are to praise the name
More sacred than all other,
An infant, when her first love came,
A man, to find it just the same,
Reverently I breathe her name,
The blessed name of mother.

G. Helter.

* * *

Hast thou not perfect excellence, it's best
To keep thy tongue in silence, for it's this
Which shames a man; as lightness does attest
The nut is empty, nor of value is.

Sa'di.

* * *

One small cloud can hide the sunlight;
Loose one string, the pearls are scattered;
Think one thought, a soul may perish;
Say one word, a heart may break.

A.A. Proctor.

"வழி காட்டி"

—:o:—

யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்க சஞ்சிகை.

பொருளடக்கம் பக்கம்.

பத்திராதிபர் குறிப்புகள் ... ... 1.

வெற்றியாருடையது ... ... 4.

நான் மட்டும் கற்றக்கொண்டால் போதுமா? ... . 7.

தமிழ் இலக்கணம் ... ... 12.

உபகாரம் வீண்போகாது
(அணிபூரண ராஜனின் ஓர் கதை) ... ... 14.

விஞ்ஞான புராணம் ... ... 17.

கடிதங்கள் ... ... 20.

மதிப்புரை ... ... 20.

பணித்திரள் ... ... 20.

விளம்பரம்.

மலாயாச் சரித்திரம் (படத்துடன்.)

இந்த அருமையான சரித்திரம் தமிழர்கள் அவசியம் அறிய வேண்டியது. இதுவே தமிழர்கள் எவ்வாறு மலாயாவில் அரசுபுரிந்தார்களென்பதையும், இஸ்லாம் மத்தைத் தழுவினர்களென்பதையும் விரிவாய்க்கூறும் புத்தகமாகும். மலாய ருக்கும் தமிழருக்குமுள்ள தொடர்பை நன்றாய் விளக்குவது. அரிய அபூர்வ சங்கதி கள் அடங்கியுள்ளது. பெண்களுக்கென்றே எளியநடையில் எழுதப்பெற்றது. மாணவ, மாணவிகளுக்கும், ஏனைய சரித்திர ஆராய்ச்சியில் பற்றுள்ளோர்களுக்கும் மிக முக்கியமான புத்தகமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

கிடைக்குமிடம்:—

C. KANDIAH PILLAY,
23, SULTAN STREET,
KLANG, F. M. S.

விலை $ 2-00. தபால் கூலி 12 காசு C. O. D. இல் $ 2-50



எல்லாவிதமான அச்சுவேலை களும், குறித்த காலத்தில் சகாய மான விதத்திற்குச் சுத்தமான வேலையாகச் செய்து கொடுக்கப் படும்.

உங்கள் பரீட்சார்த்த ஆர்ட ரைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்புங்கள்.

இன்டர்நேஷனல் பிரின்டர்ஸ்,
27, ஜாவா ஸ்திரீட், கோலாலம்பூர்.

"வழி காட்டி"

யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்க முன்னேற்ற உயரிய மாதப்பத்திரிகை.

மலர் க. | ஈசுர ஆண்டு, ஆடித் திங்கள். | இதழ் ச

பத்திராதிபர் குறிப்புகள்.

—:o:—

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வு.

தேவியின் திருவருளுடனும், நம் சகோதரிகளின் வாழ்த்துரைகளுடனும், நற்செய்திகளுடனும், இந்த நாலாவது சஞ்சிகையையும் தொடக்கியுள்ளோம். சகோதரரின் புகழ்ச்சியையாவது, இகழ்ச்சியையாவது, உத்தேசித்து நாம் இதைத் தொடங்கவில்லையாயினும், சகோதரிகள் புகழுரைகளால் அளிக்கும் உற்சாகத்தை, எம்மால் விலக்கமுடியவில்லை

வாழ்த்துச்செய்திகள் அனுப்பிய சகோதரிகளை நேரில்க்கண்டு எம்நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள விபலாதிருப்பதால், அவர்கள் யாவர்க்கும் அவர் தம் வாழ்த்துக்குரிய இச்சஞ்சிகையின் மூலமாகவே, எமது மனமார்ந்த நன்றியைத்தெரிவித்துக் கொள்ளுகிறோம். தாமும் சேர்ந்து எமக்கு உதவி செய்வதாக முன் வந்துள்ள சகோதரிகளையும், உள்ளன்புடன் வரவேற்கிறோம். அன்னரின் தேசாபிமானத்தை மெச்சுவதுடன் நம் வழிகாட்டிக்கு, அவர்களை ஒரு வழிகாட்டியாகக்கொண்டு, மற்றச்சகோதரிகள் பின்பற்றுவார்களென்று நம்புகிறோம்.

* * *

கனகத்தால் எழுதப்பட்டுவரும் "வெற்றியாருடையது" என்றகதையின் முடிவை இம்முறையும் காணவில்லை. வீட்டிற்குள் இருக்கும் நம் சகோதரிகளும் இப்படியான சமூகாபிமான எண்ணங்களால் அல்லலுறுகிறார்களா? பாவம்! அவர்களுக்காக வருந்தாமலிருக்க முடியவில்லை. என்ன கஷ்டமனுபவித்தாலும், ஈற்றில் வெற்றியாருக்காகுமோ தெரியவில்லை. கமலத்தின் சங்கதியும், பின் என்ன நடந்ததென அறிய, மிகுந்த ஆவலுடனிருக்கிறோம். அடுத்த முறையாவது, சொல்லுவார்களோ என்னவோ! கனகம் தான் பள்ளிக்கூடம் விட்டபின், எல்லாம் மறந்துவிட்டதாகவும், இது அதன்பின் எழுதும் முதல் கதையானதால், அனேகம் பிழைகள் இருக்கக்கூடுமென்றும், அத்தியாயம் வகுக்காமலும், முற்றொடரைச் சுருக்கித்தலப்பில் எழுதாமல் விட்டுவிட்டதாகவும், குற்றம் களைந்து குணத்தைக் கொள்ளும்படியும் எழுதியிருக்கிறாள். படித்துவிட்டபின், வியாசம் எழுதுவதையும் மறந்து இருபபவர்கள், கனகம் முதன்முதலெழுதியவியாசத்தைப்பார்த்து, வியப்புறுவார்களென்பதற்கையமில்லை. நாம் இப்படியான அறிவுக்குகந்த வியாசங்களையே விரும்புபவராதலால், அன்னத்தைப்போல் அதிலிருக்கும் நன்மையை மட்டும் எடுத்துக்கொண்டு, மற்றவற்றைக் கவனியாமலே விட்டுவிடுகிறோம், என்று சகோதரி கனகத்திற்கு அறிவித்துக்கொள்ளுகிறோம்.

* * *

சரஸ்வதி தான் மட்டும் கற்றுக்கொண்டால் போதாதென்று, மற்றச்சகோதரிகளையும் சேர்த்துக்கொள்ள எவ்வளவு ஆவலுறுகிறாள்! எத்தனைபேர் "தாம் அறிந்தவற்றை மற்றையோர்க்கும் அறிவித்தால் அவர்களும் அறிந்தவர்களாய் ஆகிவிடுவார்களோ! அதனால் தான்தான் அறிந்தவள் என்றில்லாமல் யாவரும் அறிந்தவர்களாகிவிட்டால், தனக்கு மதிப்பேது" என்ற ஒரு முட்டாள்த்தனமான எண்ணத்தால், தெரிந்ததையும காட்டிக்கொடுக்க மறுத்துவிடுகிறார்கள். என்னே அவர்கள் பேதமை! "தான் கற்றதை மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுக்காததினால் முடவனானவன்" கதையையறியார்களோ! அப்படி மறைத்து நடப்பவர்கள் இப்பிறவியில் மட்டுமின்றி, மறுபிறவியிலும் கடவுளின் கோபத்திற்கு ஆளாவார்கள். அதனாலல்லவா நம்முற்கால ஆயுள்

வேத வைத்தியரிற்பலரின் அடி, அடியோடு அழிந்து விட்டது. இனிமேலிருப்பவர்களாகிலும், நம் சரஸ்வதியைப்போல் நடந்து வருவாராகில், நம்மவர் முன்னேற்றமடைந்து வரத்தடையென்ன? நம் சங்கத்திற்கு, முழு உணர்ச்சியுடன் உதவிபுரிய முன் வந்திருக்கும் நம் சகோதரி சரஸ்வதிக்கும், நாம் நன்றி செலுத்தக்கடமைப்பட்டவர்களே.

* * *

சுசியால் எழுதப்பட்டிருக்கும் சிறுகதையும், அத்துடன் எழுதப்படிருக்கும் கடிதத்தையும் பார்த்து, மிகுந்த சந்தோஷம் அடைந்தோம். சகோதரிகளுக்கு இப்படியான அபிப்பிராயம் இருக்கும்போது, நாம்எடுத்துக்கொண்ட தொண்டு நன்மையடைந்துவரத் தடையேதும் உளதோ! அந்தக்கதையானது சிறுவருக்கு ஏற்றதாயிருந்தாலும், அறிவுக்குகந்ததாயும், சுவாரஸ்யமுள்ளதாயுமிருக்கிறது. வேடனின் மனைவியானவள் அரசன் தன் புருஷனுக்குச்செய்த உபகாரத்தை மனதிலுன்னிப் பிரதிஉபகாரமே புரிந்திருக்கிறாள். ஆனால் அரசனோ,

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமுமாற்ற லரிது"

என்ற திருவள்ளுவர் வாக்குப்படி, எவருடைய வாய்மூலத்தையும நம்பாமல் தன் செங்கோல் திறமையால் அவ்வேடனை விசாரணையில்லாமலே அவன் கள்வனல்லவெனக் குறியாற்கண்டு விடுதலை பண்ணிவிட்டார். அவ்வரசனின் நீதி, இன்னும் மெச்சக்கூடியதல்லவா? தற்காலத்திய நீதி அப்படியிருக்குமா? சந்தர்ப்பம், சாட்சியம் ஒன்றே தற்காலம் கனிக்கப்படுகிறது. ஈற்றில் யாவும் பூர்வ பாவ புண்ணியப்பயனென, எண்ணியிருக்கவேண்டியதுதான். சகோதரி சுசி அவர்கள், இன்னுமிப்படியான கதைகளுடன் நம் வழிகாட்டிக்குரிய வியாசங்களையும், எழுதி உதவி புரிவாரென்று நம்புகிறோம்.

* * *

இன்னும் தமிழில் பலகட்டுரைகள் வந்திருந்தும், அவற்றைப் பிரசுரிக்க முடியாமைக்காக வருந்துகிறோம். குறிக்கப்பட்ட ஒரு சங்கத்தைப்பற்றியோ, அல்லது குறிக்கப்பட்ட ஒரு நபரைப்பற்றியோ, குறை, நிறைகள், எழுத நாம விரும்பவில்லை.

எம் முக்கிய நோக்கம் நம் மக்களுக்கு அநுபவம் வாய்ந்தவரின் நன்மைபான கட்டுரைகளால், புத்திபுகட்டி, அவர்களிடமிருந்துவரும் ஒரு கெட்ட நோயாகிய பேலிக்கௌரவத்தைப் போக்கி, அவர்களைப் பெருந்தன்மையுடையோராகவும், சிக்கன வாழ்வுடையோராகவும், நம்மால் முடிந்தவரையில் சீராக்க முற்படுவதே.

யாழ்ப்பாணத்தவர் முன்னேற்றத்திற்குரிய விஷயங்கள், அனந்தம் உண்டு. அவற்றை எழுதி ஏதும் நன்மையான வழிகளைத்தேடுவதைவிட்டு, இப்படியான எழுத்துக்களால் ஏன் உங்கள் விலையேறப்பெற்ற நேரத்தைப்பாழாக்கவேண்டும்.

சகோதர சகோதரிகள், தங்கள் கட்டுரைகள் வெளிவராததற்காக நம்மேல் அயாசமடையாமல், நன்மையான முன்னேற்றத்திற்குரிய, வியாசங்களால், நம் மலரை அலங்கரிக்க வேண்டுகிறோம்.

"காட்டுச்சேலையும் அதுபோன்ற விலையுர்ந்த சேலைகளும் கட்டவேண்டாமென்று எழுதுவது ஏனெனில், அவர்களைப்போல் மற்றவர்களும் வந்து விடுவார்களோ! என்ற பொறுமையினால் தான். ஏன்? அவர்கள் வழிகாட்டினாலல்லவோ, மற்றவர்களும் பின் பற்றுவார்கள்" என்று சகோதரிகளிற் சிலர் சொல்லுகிறார்களெனக் கேட்டு, மிகுந்த சந்தோஷமடைகிறோம்.

ஏனெனில் இச்சமயத்தில் நம் வழிகாட்டிக்கு ஒத்துழைக்கும் சகோதரிகள், தாம் மற்றவர்க்கு வழிகாட்டியாய் நடக்க முன் வந்திருப்பதை உங்களுக்கும் அறிவிக்க சந்தர்ப்பம் கிடைத்தது.

மேலும் அறிவுக்குரிய கட்டுரைகள் இன்னும் சில, இம்மாசச் சஞ்சிகையில் இடமின்மையால், அடுத்தமாசம் வெளியிடப்படும். எழுதி அனுப்பும் சகோதரிகள் கொஞ்சம் முன்னதாகவே அனுப்பினால், அது அமமாசத்திற்கே அச்சுக்குக்கொடுக்கப்படும். இல்லாவிடில் கொஞ்சம் தாமதப்படும். அதற்கு வருத்தமுறுமல் வழமையாய் எழுதிவரும்படி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நம் வழிகாட்டியை அயலவரிடம் வாங்கி வாசித்துவருங் நம் சகோதரிகளே! "தானடாவிட்டாலும் தன் சதையாடும்" என்ற ஒரு பழமொழி சொல்வார்கள். அது உங்கள் விஷயத்தில் சரியாகவே இருக்கிறது. ஏனெனில், யாழ்ப்பாணத்துச் சகோதரிகள் எழுதியிருக்கிறார்களென்றதும், உங்களுக்குள் ஏதோ ஒரு சக்தியிருந்துகொண்டு, அதை வாசிக்கவேண்டுமென்று தூண்டுகிறது. அதை அறிந்த நாம் மிகுந்த சந்தோஷம் எய்துகிறோம்.

ஆனாலும் சகோதரிகளே, நமது நன்மைக்கு, நமது பிற்கால வாழ்விற்கு, உறுதுணையாகத் தானே இயன்றதைப் போட்டுச் சேமித்து வரும்படி சொல்லுகிறார்களென்பதைச் சிறிதேனும் சிந்திக்கிறீர்களில்லையே. பாவம் எங்களைப் போன்ற சகோதரிகள் தானே இரவு பகலாக, எவ்வளவு கஷ்டத்துடன் இவற்றையெல்லாம் எழுதிச் சேர்க்கிறார்கள். எங்களுக்கு ஒரு க

தம் எழுதுவதென்றால், எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. இவர்கள் ஏன் இவ்வளவு கஷ்டமெடுத்து இதை எழுதுகிறார்கள்? இதனால் இவர்களுக்கு வரும்லாபமென்ன? என்பவற்றைச் சற்றுநேரமாவது ஆறுதலாக இருந்து சிந்திக்கின்றீர்களா?

அப்படியானால் உங்கள் பத்தாமார்தான் யாழ்ப்பாணத்தார் அல்லவென்று வேறு சங்கங்களில் சேர்ந்து இருந்தாலும், நீங்கள் யாழ்ப்பாணத்துச் சகோதரிகளும் தேசாபிமானம் அற்றவர்களா? இல்லை! ஒருபோதும் அவ்விதம் சொல்லமுடியாது! நீங்கள் கூடிக்கொண்டு போனால்தானே "இதோ போகிறவர்கள் யாழ்ப்பாணத்தவர்" என்று சொல்லலாம். இல்லாவிடில் யாரும் எண்டு கொள்வது கஷ்டமே! அப்படி எல்லாவற்றிலும் தேசாபிமானம் கொண்டுள்ள நம் சகோதரிகளே! என்ன யோசிக்கிறீர்கள்? நீங்கள் அங்கத்தவராகச்சேர்ந்து நம் சங்கத்தை அழகுறச் செய்வதுடன், இவ்வழிகாட்டியின் ஒவ்வொரு பிரதியும் உங்கள் வீடு தேடிவந்து "நாமும் யாழ்ப்பாணத்தவர் சங்க அங்கத்தவர்" என்ற பெருமையையும் உங்களுக்குச் சூட்டுமே. இதற்காக ஒவ்வொரு மாசமும் யாரிடத்திலேனும் போய்க்கேட்டலைய வேண்டுமோ?

வேண்டாம்! சகோதரிகளே வேண்டாம்! உணர்ச்சியுடன் இன்றே சேர்ந்துவிடுங்கள்! யாழ்ப்பாணத்தவர்க்கென இவ்வூரில் நிலைபெற்றிருக்கும் இந்த ஒரே சங்கத்திற்கு யாழ்ப்பாணத்தவர் ஒத்துழையாவிடில் வேறுயார் ஒத்துழைப்பது? வேறு சாகியத்தவரிடத்தாயின், இது போன்ற ஒரு சங்கம் பெண்களாலேயே எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கும்? நம் சமூகத்தவர் நம்மை அடிபபூதிகள், அறிவற்றவர்; அவர்களுக்கென்ன தெரியும், என்று ஒதுக்கி வைக்க, வைக்க, நாமும் உண்மையில் உள்ள அறிவுமமயங்கி, அறிவற்றவராகவே வந்துவிடுகிறோம். நமக்கென ஓர் சங்கமிருப்பதை அறிந்து கொண்டு நாம் வாழாவிருப்பது பழிப்புக்கிடமாகுமல்லவா?

சகோதரிகளே என் விழிக்கிறீர்கள்! என்ன நீண்டு ஆலோசனை செய்கிறீர்கள்! இனி என்ன சிந்தனை! ஓகோ! அறிந்துகொண்டேன்! உங்கள் யோசனையை! நம் சகோதரிகள் உத்தம பதிபக்தி உள்ளவர்கள் அல்லவா? "எங்கள் பத்தாமார் யாழ்ப்பணத்தவர் அல்லவென்றால், நாமெங்ஙனம் யாழ்ப்பாணத்தவர் ஆகலாம்! என்றுதானே யோசிக்கிறீர்கள். அது நியாயந்தானே! அதற்கென்ன பரிகாரம் தேடலாம். சற்றுப் பொறுங்கள்... யோசித்துச் சொல்லுகிறேன்...

இதோ வந்துவிட்டது! அதுதான்! உங்கள் பத்தாமாரை, நீங்களே யாழ்ப்பணத்தவர் ஆக்குங்கள். அவ்வளவுதான் நான் உங்களுக்குச் சொல்லக்கூடிய யோசனை. யாழ்ப்பாணத்தவராக்கித் தேசாபிமானத்தையும், சமூகாபிமானத்தையும், நீங்களே அவர்கள் மனதில் ஊற்றெடுக்கப் பண்ணவேண்டும். உங்கள் தேசாபிமானமே அவர்களுக்கு உதவியாய், யாவரும் ஒத்துழைக்க முன் வருவீர்களென்று நம்பியிருக்கிறோம்.

நீங்கள் சில அசௌகரியங்களால் சந்தாதாரராகவாவது சேர இயலாமலிருந்து கொண்டும், எம் சஞ்சிகையை ஆவலுடன் வாசிப்பதறிந்து, நாம் சந்தோஷமடையாமலிருக்க முடியவில்லை. ஆனால் அந்தப் புஸ்தகத்தை உங்களுக்கு இரவல் கொடுத்துவரும் சகோதரிகளில் சிலர் அதை வாசித்துப்பார்க்காமலே அசட்டையாய் இருப்பதறிந்து உண்மையில் நாம் மிகவும் வருந்துகிறோம். நீங்களாவது அவர்களுக்குப் புத்திபுகட்டி அதை வாசிக்கச் செய்யவேண்டும்.

ஆராய்ச்சிக்கிழவியாரால் எழுதப்பட்டிருக்கும் விஞ்ஞான புராணமும் நாம் அறியவேண்டியதே. ஆனால் நம்தாய்நாட்டு ஆராய்ச்சிவாளரைப்பற்றி அறியவே மிகுந்த ஆவலுடனிருக்கிறோம். ஆர் எவ்வளவு கெட்டித்தனமாயிருந்தாலும், தன் தாயின் செய்கை இன்னும் விசேஷமல்லவா.

* * *

அடுத்தமுறை ஆராய்ச்சிக்கிழவியின் ஆராய்ச்சிக்கட்டுரைகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இவற்றையும் நாம் அறிந்திருப்பது மிகவும் நன்மையே. நாம் அறிவதுடன் நம் குழந்தைகளுக்கும் வாசித்துக் காட்டல் மிகவும் நல்லது. ஆராய்ச்சிக் கிழவியார் அனுபவசாலியானதினால், இவற்றை யெல்லாம் எவ்வளவு சுருக்கமாகவும், விளக்கமாகவும் சொல்லியிருக்கிறார்கள். பாவம் தொண்டை வரண்டுவிட்டதாம். கோப்பி குடித்துக் களைப்பாறிவரட்டும். மிகுதியை அவசியம் கேட்கவேண்டும்.

சிங்களம் புட்பகம் சாவக - மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அந்த
சீன மிசிரம் யவனரக—மீன்னும்
தேசம் பலவும் புகழ்வீச—கலை
ஞானம் படைத்தோழில் வாணிபமும்—மிக
நன்று வழர்த்தவே நாடிடுவோம்.

—பாரதியார்.

வெற்றியாருடையது.

—:o:—

[முற்றொடர்ச்சி.]

நான். கடவுளின் விருப்பமென்ன! நம்மனச் சரட்சிக்கு விரோதமில்லாமல் நடப்பதே: துணிவும், வீரமும், உடையோராய், மற்றையோர் மாட்டித் தாராள சிந்தையுடையராயிருக்க வேண்டும். விடாமுயற்சியுடன், தமது கடமையைத் திடசிந்தையுடன் இயற்றவேண்டும். மேலும் நாம் செய்வதெல்லாம், கடவுள் செயலே என அவருக்கு நம்மை அர்ப்பணஞ் செய்யவேண்டும். அவரே நமது சீவியத்திற்கும், எடுத்துக்கொண்ட தொண்டுக்கும், வழிகாட்டியாய் நின்று உதவிபுரிவார்.

அந்த நம்பிக்கையுடன், நம்சாதி மக்களுக்கு நம்மாலியன்ற உதவிபுரிந்து, அவர்களை மேல் நிலைக்குக் கொண்டுவரவும், எங்கள் பிற்கால சந்ததியாருக்கு ஒரு வழிகாட்டியாயிருக்கவும் முயலலாகாதா?

அவர்: அதனால் வெறுங் கஷ்டமல்லால் அடையும் நன்மைதானென்ன?

நான்: எங்கள் நன்மைக்கு ஒன்றுமில்லைத்தான். ஆனால் ஏதோ நாம் பிறந்ததற்கு நம்மாலியன்ற தொண்டுபுரிந்தோமென்ற ஒரு மனச்சாந்தி ஏற்படுமல்லவா! என்மேல் கோபித்துக் கொள்ளாமல் ஆனவரையில் முயன்று கஷ்டப்பட்டு, நம்மவர்க்கு உழைத்து, தேசாபிமானி என்ற பெயரெடுத்து, தேகமழிந்த பின்னும் அழிந்துபோகாத அந்தப் புகழுடம்பைப் பெற்றீர்களானால், அப்பவே நான் பாக்கியசாலியாவேன்: அதைவிடநான் வேண்டுவது வேறென்ன? உதாரணமாக, பாருங்கள் எங்கள் கமலாவின் புருஷனை. எவ்வளவு கஷ்டமானதன்உத்தியோகத்தோடு இன்னும் எந்நேரமும், ஏதோகூட்டமென்றும், இந்தச்சங்கத் தலைவராகவும், அந்தச்சங்கத்தின் காரியதரிசியாகவும், இப்படியே ஒவ்வொரு நிமிஷமும், விலை மதிப்புள்ளதாக மதித்து, எவ்வளவு கஷ்டத்துடன் வேலைசெய்து வருகிறார்.

அவர்: அதுதான் அவர்களிருவரும் எந்நேரமும் நாயும் பூனையும் போலிருக்கிறார்களோ? பாவம், அவள் புருஷன் வீட்டில் தாமதிப்பதில்லையே என்று அவள் வருந்துகிறாள். நீயோ அதற்கு எதிர்மாறாக இருக்கிறாய். எல்லாம் காலத்தின் கோலம்.

நான்: பாவம், அவர் மனைவியோ ஒன்றும் அறியாதவள். எழுத்துவாசனையே அற்றவள். அவளுக்கு அதன் அருமையும், பெருமையும் என்ன தெரியப்போகிறது! தெரிந்தால் இபபடி எல்லாம் பிதற்றுவாளா? அதுதான் மிகவும் வருந்தத்தக்கது. இப்படியான ஒரு பெருந்தகையாளனுக்கு வீட்டிலும் உற்சாகமிருக்குமாகில், எவ்வளவு சாதிக்கமுடியும்! ஆனால் கடைசியிலாவது எல்லாமறிந்து வருந்துவாள்.

அவர்: என்ன! அவள் படியாதவளா? எழுத்துவாசனையே அற்றவளா? அவள் படியாதவளென்பது "கேழ்வரகில் நெய்யொழுகுகிறது" என்பதுபோலல்லவா இருக்கிறது.

நான்: என்ன நான உங்களுக்குப்பொய் சொல்லுவதாகவா எண்ணிக்கொண்டீர்கள்? சரி நான்சொன்னால்தான் நம்பமாட்டீர்கள்! நீங்களே நேரில் அவளிடம் கேட்டுத்தெரிந்து கொள்ளுங்கள்.

அவர்: இனிமேல் நீ அங்கே போகவுங் கூடாது. ஏன் எனில் அவள் தன் புருஷனைப் பற்றிப்பிரமாதமாகப் புகழ்ந்து பேசியிருப்பதைத் தானே, நீ கேட்டு என்னையும் மூடனாக்கத் திரிகிறாய்.

நான்: அப்படி ஒன்றும் நடக்கவில்லையே! இந்தப்பத்திரிகையிலல்லவா இருக்கிறது. இதோ பாருங்கள். இதைப்பார்த்தால் அவரைப்பற்றி எவ்வளவு போட்டிருக்கிறார்களென்பது தெரியும். அவளுக்குத்தான், தன்புருஷன் செய்கை ஒன்றும் ஒத்துப்போவதில்லையே? அப்படியிருக்கலப்படி அவள் புழுகுவாள்.

அவர். இதுதான் தெரியாமலா, பெண்கள் படிக்கக்கூடாதென்று மூதாதையர் சொல்லி வைத்தார்கள். படித்ததின் நன்மை இதுதானா? யாரோ ஒருவன் என்னவோ செய்தானும்? அதற்காக நானும் பயித்தியம் கொண்டலைய வேணுமாம். ஏதோ கடைசிகாலத்திற்கு வேண்டுமே என்று நானுகாசு மனுஷர் தேடிவைத்திருந்தால் அதற்கும் ஏதும் வழிதேடப் பார்க்கிறாய்.

நான்: ஆ! மனுஷர் என்றேன்வித்தியாசமாகச் சொல்லிக் கொள்ளுகிறீர்கள். அதில் எனக்கும் பங்கில்லையோ? ஆனால் அதைச் சேர்த்து அந்தச் சங்கங்களில் போட்டுவைத்தாலும் எங்கே போகும்? கடைசியில் எங்களுக்குத்தானே கொடுப்பார்கள். இங்கே பாருங்கள்! இந்தப் பக்கத்தில் என்ன எழுதியிருக்கென்று. கமலாவின் புருஷன் தன்சம்பளத்தில், வீட்டுச்செலவு போக மிகுதியில் கொஞ்சம் சங்கத்திலும் போட்டுவருகிறாராம். மிச்சம் எல்லாம் தன்சொந்த

மோட்டாரில் எங்கும் போய்ப்பிரசங்கம் பண்ணவே சரியாயிருக்குமாம். அப்படி தன் செலவையும் பாராமல், சரீரக்கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல், எவ்வளவு தூரம் கஷ்டப்படுகிறரென்று எழுதியிருப்பதைப் பாருங்கள். இன்னும் இப்போ கூலிச்சனங்களுக்காகவும் ஒரு சேமநிதி ஏற்படுத்தியிருக்கிறராம். அவர்களுக்காகப் பாடுபடுவதே உண்மையில் கடவுளுக்குகந்தது.

"பூட்டற்றுத் தேகமற்றுப் போகு
முன்னே நின்னருளே
காட்டத்தகாதோ என் கண்ணே பராபரமே."

என்பனபோல, தங்கள் தேகம் அழியுமென அறிந்தும், அதற்கிடையில் கடவுளுக்குகந்ததான தொண்டுகளை இயற்ற வழியிருந்தும், சரீர பெலமிருந்தும், மனமற்று இருந்துகொண்டு வாயால் மட்டும் தோத்திரங்களைப்படித்து, இருப்பவர்களுக்கு ஈசனருள் எவ்வாறு சித்திக்கும்? அவர் உண்மையில் அடியார்க்கும் அடியவராய், எவ்வளவு கஷ்டநஷ்டங்களையும் தாங்கிப் பொறுமையுடன் வேலைசெய்து வருகிறரென்று எழுதியிருப்பதைக்கொஞ்சம் கவனமாக வாசித்துப்பாருங்கள். அவகளும் வீணாக எடுப்பதெல்லாம் செலவழித்துவிடாமல், ஒன்றோ, இரண்டோ, தங்களாலியன்ற அளவுபோட்டு வந்தால், பின் அவர்களுக்குத்தானே நன்மை. ஆனால் அது நன்மை என்று அவர்கள் மனதில் படச்செய்வதற்கு எத்தனை நாள் எவ்வளவு கஷ்டப்பட்டாராம்.

அவர்: ஏன் (Post Office) போஸ்ட் ஆபீஸ்தானே இருக்கிறது. அதில் அவர்கள் விரும்பியபோது போடாலாமே; இவர் ஏன் அவ்வளவு கஷ்டப்படவேண்டும்.

நான்: என்ன! இது கூட விளங்கவில்லையா உங்களுக்கு? (Post Office) தபால் நிலையத்தில் அவர்கள் விரும்பினால் போடுவார்கள். இல்லாவிடில் எல்லாவற்றையும் செலவழித்துப்போட்டுக் கடைசியில் அந்தரிப்பார்கள். இது இவர் செய்யும் பிரசங்கத்தைக்கேட்டு, தங்கள் பிற்காலக் கஷ்டங்களை மனதார அறிந்து, அதனால் மனமொத்துப் போடுகிறார்கள். அவர்களை அந்தக் கூடுறவுச் சங்கத்தில் சேர்ப்பதற்காக, இரவு பகலாய் எவ்வளவு கஷ்டப்பட்டாராம்!

"தோன்றிற்புகழொடு தோன்றுக, அஃதில்லார்
தோன்றலிற் தோன்றாமை நன்று."

என்ற பெரியோர் வாக்குப்படியல்லவா அவர் நடந்து வருகிறார் என்று நான் சொல்லி வாய்மூடுமுன் எனது நாயகர் ஒன்றும் பேசாமல் எழும்பி மழமழவென்று நடந்து கேட்டைத் தாண்டி மின்னல்போல் மறைந்துவிட்டார். என்ன "ஒன்றும் சொல்லாமல் எங்கே போகிறீர்கள்" என்று சொல்லிக்கொண்டு படிக்கூட்டு வரைக்கும் வந்த நான், அவர் போன திசையையே நோக்கிக் கொண்டு, கல்சிலைபோல் நின்று விட்டேன். ஐயையோ! என்ன காரியம் செய்துவிட்டேன்! பாதகியானேனே! என்மேல் எவ்வளவு அன்புடனும், ஆவலுடனும், வீட்டுக்கு ஓடிவரும் என்னருமை மனைவியின் மனதைப் புண்படுத்திவிட்டேனே பாவி! பெண்புத்தி பின்புத்தியென்பார்களே! இனி என்ன செய்வேன் தெய்வமே! என்று கண்ணீரைப் பெருக்கிய வண்ணம் அதிலேயே உட்கார்ந்துவிட்டேன். எவ்வளவு நேரம் இருந்தேனென்பது தெரியாது.

"இருட்டிவிட்டது. வாருங்கோ அம்மா உள்ளே. ஏன் இருக்கிறீர்கள்? ஐயா எங்கே? ஏன் அழுகிறீர்கள்?" என்று என்னருமை பாலரிருவரும் என் கைகளைப் பிடித்து முத்தமிட்டுத்தான் என் சுய அறிவு வரப்பெற்றேன். ஐயா வெளியே போயிருக்கிறார். நீங்கள் வாங்கோடா உள்ளே போவோம். எனக்கு வயிற்றுவலி; அதனால்தான் அழுதேன், என்று அவர்களைச் சமாதானப்படுத்தி அழைத்துவந்து அவர்களுக்குச் சாப்பாடு கொடுத்துப் படுக்கவைத்தேன்.

மணியும் ஒன்பதடித்து விட்டது. வரவர கவலை பதிகரித்தது. என் செய்வேன். எனைலானவரை கடவுளை வேண்டிக் கொண்டு ஒருசிறு அரவம் கேட்டாலும், வருகிறார, வருகிறாரா, என்று யன்னலால் எட்டி எட்டிப் பார்த்துக் காத்திருந்தேன்- ஒவ்வொரு நிமிஷமும் மணியைப் பார்ப்பதால் போலும், மணியுமோ அசைவதாகக் காணவில்லை. இப்படியே ஒரு மணியும் ஒரு யுகம் போல் கழிந்து மணி 10 அடித்தது. ஆள் வரும் காலடிச் சத்தமும் கேட்டது. முதல் யன்னலால் எட்டிப் பார்த்துவிட்டு ஆவலுடன் போய்க் கதவைத் திறந்தேன்.

உட்புகுந்த எனது நாதர் திரும்பிப் பாராமலே போயிருந்து உடுப்பைக் கழற்றி வேட்டி கட்டிக் கொண்டு முகம் கழுவப் போய்விட்டார். இனிச் சாப்பிடத்தானே வருவாரென்று நான் அவசரமாகச் சாப்பாடெடுத்து ஆயத்தப்படுத்தி விட்டு வந்துபார்க்க அவர் சபனித்திருக்கக் கண்டேன். கிட்டப்போகவும்பயமாயிருக்கிறது. ஒருநாளுமில்லாமல் இன்று இப்படியான கோபத்தைப்பார்க்க பயமொருபுறம், மனவருத்தம் மறுபுறமாக என் மனதை வதைக்கிறது. என்ன இருந்தாலும் ஒருமுறை கேட்டுப்பார்ப்போ மென்று மெல்லக் கிட்டப் போய், 'என் பாருங்கோ சாப்பாடு எடுத்தாய் விட்டது. கொஞ்சம் சாப்பிட்டுவிட்டுப் படுக்குறதோ பஞ்சியாலை சொல்லுங்கள்; இவ்விடமே கொண்டு வருகிறேன்" என்றேன் அவர் ஒன்றுமே பேசவில்லை. இரண்டு மூன்று முறை

கேட்டுப் பார்த்தேன். பதிலே இல்லை. "அவ்வளவு கோபத்தை மூட்டக் கூடிய அபராதம் என்னதான் செய்துவிட்டேன். சங்கங்களில் சேர்ந்து அபிமானியாயிருக்க விரும்பாவிடில் விட்டு விடுங்கள். நான் இனி அதுபற்றி ஒன்றுமே சொல்லவில்லை. இதை மட்டும் மன்னித்து விடுங்கள்" என்றேன்.

அதுகேட்டதும் ருத்ர மூர்த்திபோல் எழுந்திருந்து "உனக்கு மற்றவர் செய்வதுதான் கெட்டித்தனம்; நான் செய்வதொன்றும் பிடிப்பதில்லை. சரி இன்று தொடக்கம் நான் நேரத்துக்கு வீட்டுக்கு வரப் போவதில்லை. நான் தேன்றுமலை இருந்தால் நீ சந்தோஷமாய் இருப்பாய் தானே. அபபடியென எண்ணிக் கொள். சாப்பாட்டிற்கும் எனக்காக காத்திருக்க வேண்டாம். என் முன்னல் நிற்காதே போ" என்று சீறினர்.

தெய்வமே இதுவும் உன் திருவிளையாடலோ என எண்ணிக் கொண்டு போய் படுத்துக் கொண்டேன். ஆனல் நித்திரையோ என்னை எட்டியும் பார்க்க மறுத்துவிட்டது. சிவனே, சிவனே என்று ராமுழுதும் கடவுளை வேண்டியபடியே தலையணையைக் கண்ணீரால் நனைத்து எப்போ விடியும், விடியும் என்று காத்திருந்தேன். இரவும் நீண்டுகொண்டே போனதல்லால் விடிவதாக்த் தெரியவில்லை. நான் சிறு பிள்ளையாய்ப் படித்தது சைவப் பள்ளிக்கூடம்தான். அதில் காலை மாலை சுவாமி ஸ்தோத்திரமும் உண்டு. அதுமுதல் நானும் அவரே தஞ்சமெனக் காலை மாலை வணங்கி வருபவள்தான். ஆனாலும் இந்த இரவைப் போல் முழு இரவும் கடவுளை வணங்கி இருக்கச்சந்தர்ப்ப மேற்படவில்லை. "நிராசை யிலேறல் கடவுளில்லை" என்பது என் விஷயத்தில் சரியாயிற்று. யானை தன்னைக் கட்டச் சங்கிலிதானே எடுத்துக்கொடுக்குமாப்போல்என் விஷயமும் ஆய்விட்டது. இனி என்ன செய்வது.

பொழுதும் ஒரு விதமாய் விடிந்தது. நான் வழமைபோல் எழும்பி வீட்டுக் கருமங்கள் பார்க்கத் தொடங்கினேன். குழந்தைகள் இருவரும் பக்கத்திலிருக்கும் பள்ளிக்கூடத்திற்குப் போகிறவர்கள். அவர்களுக்கு உடுப்பு போட்டுவிட்டு தகப்பனையும் போய்ச் சாப்பிட அழைத்தேன். "எனக்குச் சாப்பாடு வேண்டாம்" கொஞ்சம் கோப்பி கொண்டுவா" என்றார். அதாவது கேட்டாரே என்று அவசரமாகக் கோப்பி கலந்து கொண்டு வந்து கொடுத்தேன். அதைக் குடித்து விட்டு "நீ எனக்காக காத்திருக்கவேண்டாம், எத்தனை மணிக்குத் திரும்புவேனே தெரியாது" என்று திரும்பிப் பார்க்காமலே சொல்லிவிட்டு என் பதிலுக்கெதிர் பாராமலே சென்றுவிட்டார்.

தெய்வமே இதுவும் உன் சோதனையா என்று எல்லாம் மனதில் அடக்கிக் கொண்டு, பிள்ளைகளுக்குச் சாப்பாடு கொடுத்துப் பள்ளிக்கூடம் அனுப்பிவிட்டு, அறைக்குள் போய் அவ்விடமிருந்த விநாயகர் படத்துக்கு முன்னல் நின்று என் கவலை தீர அழுதுவிட்டு அவரையே வேண்டியபடி படுத்துவிட்டேன்.

இராமுழுதும் நித்திரையே யில்லாமலிருந்தேனோ என்னவோ படுத்ததும் நித்திரையாய் விட்டேன். "பகல் பத்து மணியுமாய் விட்டது. அம்மா பிள்ளைகள் வந்துவிட்டப் போகிறார்களே! என்ன கறி வைப்பது" என்று சமையல்காரன் கதவில் தட்டினதும், திடுக்கிட்டு கண்விழித்தேன். கண்விழித்தும் தலைதூக்க முடியவில்லை. "அடே கறுப்பையா! ஏதாவது வைத்து விடடா; என்னல் இன்று வா முடியவில்லை; தலைகன்மாயிருக்கிறது; குழந்தைகளுக்கு ஏதும் பொரித்து, ஒரு சொதியும் வைத்துவிடு; ஐயா இன்று மத்தியானம் வரமாட்டாராம்" என்று சொல்லிவிட்டுப் படுத்துக் கொண்டேன். வயிற்றில் ஒரு கல் வைத்துக் கட்டி விட்டதுபோல் பசியாவது, தாகமாவது, தோற்றப்படவில்லை. மூளையோ பலமாக வேலை செய்கிறது. என்னென்ன எண்ணமெல்லாம் எண்ணியிருந்தேன். எல்லா மனக் கோட்டையும் ஒரே நொடியில் இடிந்து மண்ணோடு மண்ணாய் போய்விட்டதே. இனி என் வாழ்நாளாகிய நாடகத்தின் பிற்பக்கம் எவ்விதம் முடியப் போகிறதோ, ஈசா; என எண்ணிக் கொண்டே இருக்க, மணி 12 அடித்த சத்தம் கேட்டது.

பிள்ளைகள் விந்துவிடப் போகிறார்களே; பச்சிளங் குழவிகளான அவர்களும் என் நிலைபாத்தைப் பார்த்து வருந்துவார்களே! என நினைத்து விசையாக எழுந்து குளிக்கும் அறை போய் முகம் கழுவிவிட்டு வந்து வீட்டையும் என் கை போன போக்கில் சுத்தி செய்து அவர்கள் வரவை எதிர் நோக்கி நின்றேன். பிள்ளைகளும் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்குக் குளிக்க வார்த்து, சட்டை போட்டுச் சாப்பிட அழைத்துப் போனேன். எப்போதும் தகப்பனுடன் சாப்பிட்டு வழக்கப்பட்டிருந்தவர்களானதினல், சாப்பாட்டு மேசையில் தகப்பனைக் காணுமல் "என் அம்மா இன்னும் ஐயா வரவில்லை" என்று கேட்டார்கள். ஐயாவுக்கு வேலை அதிகமாம்; அதனல் வர நேரமில்லை என்று சொல்லி, அவர்களுக்குச் சாப்பாடு கொடுத்து அனுப்பிவிட்டேன். பாவம் அவர்களுக்கு என்ன தெரியும்; நான் சொன்னதை மெய்யென நம்பிய அவர்கள், சந்தோஷமாக விளையாடப் போய்விட்டார்கள்.

(தொடரும்)

—கலகம்

நான்மட்டும் கற்றுக்கொண்டால் போதுமா?

போனமாசம், நான் துணிவாங்கப்போயிருந்தபோது, வரும் வழியில் என் சிநேகிதி வீட்டிலிறங்கியதும், அவளிடம் மோரின் நன்மையைப்பற்றி அறிந்ததும், அதன்பின் எங்கள் வீடுவந்து சேர்ந்து, அவள் வீட்டைப்போல் எங்கள் வீட்டை அழகாக வைத்திருக்க முயன்றதும், அதுபார்த்த என்காதர் அவளிடம்போய் இன்னும் சிக்கனமும் கற்றுவரச் சொன்னதும் எல்லாம் எழுதியிருந்தேனல்லவா.

அதன்பின் இரண்டு மூன்று தினங்களாக அவள் வீட்டுக்குப்போக எனக்கு நேரம் கிடைக்கவில்லை. அடுத்த வெள்ளிக்கிழமை கோவிலில் சந்தித்தோம். உன்வீட்டுக்கு வரவேண்டுமென்றிருக்கிறேன்; நேரங்கிடைக்கவில்லை; இனிச்சனி ஞாயிற்றில் நேரக்கிடைக்காது; திங்கட்கிழமை வருகிறேன் என்றேன். அதற்கவள் என்ன அப்படி அவசரம்? வீட்டில் உனக்குத்தான் என்ன வேலை? என்றாள். அதற்கு நான் மறுமொழி சொல்லுமுன், பூஜை ஆரம்பமாய் விட்டபடியால் எங்கள் சம்பாஷணை அத்துடன் தடைபடலாயிற்று.

பூஜையானதும் அவள் விழுந்து கும்பிடுவதைப் பார்த்து, (நானும் சேலை அழுக்காய் விடுமென்று பயந்துபோய், மற்றவர்கள் கும்பிடும்போது சும்மா கிற்பது எனக்கும் வெட்கமாயிருந்தபடியால்) நானும் விழுந்து கும்பிட்டு வீடுவந்து சேர்ந்தேன். என் சேலையோ எண்பத்தைந்து வெள்ளிக்கு வாங்கின பட்டு. அவள் உடுத்தியிருந்தது வெறும் வெள்ளையில் கறுப்புக் கரை வைத்த சாதாரண துணி. அவள் எப்படியும் விழுந்து கும்பிடலாம்; அழுக்கானால் தோய்த்துக் கொள்ளலாம்; என் சேலை தோய்க்க முடியுமா? நீங்களே சொல்லுங்கள்.

அடுத்த திங்கட்கிழமை சமையற்காரனிடம் எல்லாம் சொல்லிவிட்டுக் காலை பத்தரை மணிபோல், என் சிநேகிதி வீடு போய்ச் சேர்ந்தேன். அன்றும் அவள் பிள்ளைகளுக்குச் சாப்பாடு அனுப்பும் நேரம். மோரும், வேறும் என்னவோ வாழை இலையில்சுற்றி அனுப்பினாள், "அதென்ன வாழை இலையில் சுற்றி அனுப்பினாய்" என்று கேட்டுக் கொண்டே உட்கார்ந்தேன்.

"அது ஒரு விதமான கொழுக்கட்டை. இதோ இருக்கிறது. கொஞ்சம் சாப்பிட்டுப் பார்" என்று சொல்லி ஒருதட்டில் வாழை இலை போட்டுக் கொஞ்சம் எடுத்து என் எதிரில் வைத்தாள் நான் கையிலெடுத்துப் பார்த்துவிட்டு "நீங்கள் மச்ச மாமிசம் சாப்பிடாதவராயிற்றே; இதெல்லாம் செய்து பிள்ளைகளுக்குக் கொடுக்கலாமா" என்றேன். "இது என்ன என்று தெரியாததினால் சொல்லுகிறாய். சாப்பிட்டு விட்டுச் சொல்" என்றாள்.

நானும் சரி யென்று சாப்பிட்டுப் பார்த்தேன். உள்ளுக்கு வெறும் உருளைக் கிழங்குதான். ஆனால் நாங்கள் செய்யும் கறிபவ் **(Curry Puff)** என்றதினும் பார்க்க, இது வாய்க்கு எவ்வளவோ மேன்மையாயும், ருசியாயும் இருந்தது. "மிகவும் நல்லாயிருக்கே, இதை எப்படிச் செய்தாய்" என்றேன். இதற்கு உருளைக் கிழங்கைக் குருணலாக நறுக்கி வைத்துக் கொண்டு, வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி, கரிவேப்பிலை, இவைகளையும் கறிக்குப் போடும் அளவு எடுத்துக் குருணலாக அரிந்து, உப்பு, மிளகாய்த் தூள், தேங்காய்ப்பால், எல்லாம் போட்டுக் கறி ஆக்குவது போல் ஆக்கி வைத்துக்கொள்ள வேண்டும். பின், பூரி செய்வதற்கு மா நெய் விட்டுக் குழைக்கிறோமே அதுபோல் குழைத்து, வட்டம் வட்டமாய்த் தட்டி எடுத்து, இந்தக் கறியில் ஒவ்வொரு கறண்டியைப் போட்டு கொழுக்கட்டை பிடிப்பதுபோல் அமத்தி மூடி, அடுப்பில் எண்ணெய்யோ நெய்யோ காய வைத்துப் போட்டு எடுக்க வேண்டியதுதான் என்றாள்.

நான்: அப்பாடா! எவ்வளவு வேலை! இதிற் பார்க்க ஒரு ரொட்டியையும், வெண்ணை **(Butter)** யும் வாங்கி வைத்தால் போச்சு. இல்லாவிடில் ஐந்து காசை கையில் கொடுத்தால் ஏதும் அவர்கள் விருப்பமானதை வாங்கிச் சாப்பிடுவார்கள்.

அவள்: நீ பணக்காரி நான் அப்படிக்கொடுத்துவிடக் கட்டுமா? ஒரு பிள்ளைக்கு ஐந்து காசாய் மூன்று பிள்ளைகளுக்கும் ஒரு நாளைக்கு பதினைந்து காசு கொடுத்து விட்டால் மாசம் எவ்வளவு ஆகும். அதைவிட இன்னும் மேலான அபாயம், குழந்தைகளைக் கண்ட சர்பாடி சாப்பிட விடுவதினால் உண்டாவதை நீ கேள்விப்படவில்லையோ?

நான்: அப்படி என்ன அபாயம் வரப்போகிறது? பள்ளிக்கூடங்களில் இதற்கென்று துப்பரவாகக் கடைகள் வைத்திருக்கிறார்களே!

அவள்: பள்ளிக்கூடங்களிலும் எப்படி வைத்திருக்கிறார்களோ? யார் கண்டார். அத்துடன் பிள்ளைகள் கையில் காசுண்டானால், வழியில் போகிறவர்களிடம் வாங்கிச் சாப்பிட மாட்டார்களா? போன மாசமும் ஒரு குழந்தை இறந்துவிட்டது.

நான்: எப்படி இறந்தது? ஏதும் வருத்தமாயிருக்கும். பிள்ளையின் வயசென்ன.

அவள்: பிள்ளைக்கு வயசு ஒன்பதாம். பெற்றோருக்கு ஒரே பிள்ளை. மிகவும் செல்வமாகவே வளர்த்து வந்தார்கள். ஐயோ! பாவம்! தாயின் பரிதாபம் பார்த்துச் சகிக்க முடியவில்லை. உயிர் வைத்திருப்பாளென்றும் நான் நம்பவில்லை.

நான்: பிள்ளை இறந்தால் தாயாருக்குத் துக்கம் இருக்காதா? இருக்கும்தானே! என்ன வருத்தத்தாலிறந்தது என்று சொல்ல வில்லையே.

அவள்: ஐயோ! பிள்ளை வருத்தம் வந்திறந்திருந்தால் பெருமான் செயல் என்று கொஞ்சமாவது ஆறியிருப்பாளே! இது நான்தானே கொன்றேன்! பாவி! பாவி! என்று அவள் முட்டிக் கொள்வது கொஞ்சமல்ல.

நான்: என்ன! தாயார் பிள்ளையைக் கொன்றாளா? எனக்கு ஒன்றும் விளங்க வில்லையே!

அவள்: அதுதான் சொல்லமுன் அந்தரப் படுகிறாயே. பிள்ளைக்குப் பள்ளிக்கூடம் போகும் போது, கையில் காசு கொடுத்துவிட வேண்டாமென்று, தகப்பன் எத்தனையோதடவை சொல்லியிருக்கிறாராம். அதைத் தாய் கேட்காமல் மற்றப் பிள்ளைகள் வாங்கிச் சாப்பிடும்போது, என்பிள்ளை பார்த்து நிற்கிறதே, என்று கொடுத்து விடுவாளாம். இப்படியே அன்றும் கொடுத்து விட்டாளாம். பிள்ளை காடிக்குக் காத்துக்கொண்டு பள்ளிக்கூட வாசலில் நின்றதாம். அப்போ என்னவோ கொண்டு போனவர்களிடம் வாங்கிச் சாப்பிட்டு விட்டதாம். வீட்டுக்கு வந்ததும் வயிற்று வலி எடுத்துவிட்டதாம். தாயார் என்ன செய்தும் கூடினதேயன்றிக் குறையவில்லையாம். உடனே தாயார் அடுத்த வீட்டார் உதவியோடு பிள்ளையை வைத்தியசாலைக்குக் கொண்டு போனாளாம்.

அவர்கள் பார்த்துவிட்டுத் தகப்பனைங்கே என்று விசாரித்து, பிள்ளைக்கு வயிற்றில் விஷங் கலந்திருப்பதாகவும், உடனே சத்திர (Operation) வைத்தியம் செய்ய வேண்டுமென்றும் பேசுங் (Telephone) கருவி மூலம் கேட்டார்களாம். ஐயோ பாவம்! தகப்பனுக்கு ஒன்றும் விளங்காமல், பிள்ளையைப் பார்க்காமல், ஒரு நிலைபரமும் அறியாமல், எப்படிதான் சம்மதி கொடுப்பார். "கொஞ்சம் பொறுங்கள் நான் வருகிறேன்" என்று சொல்லி, அவசரமாகப் போய்ச் சேர்ந்தாராம். போனதும் தாயாரின் குழறலையும், தனயனின் பிரேதத்தையுந்தான் கண்டார். ஐயோ! அங்கு என்னதான் நடந்திருக்குமென்பதை நீயே யோசித்துக் கொள்.

நான்: அடடா! எவ்வளவு பரிதாபம்! இதைக் கேட்ட எனக்கே உடம்பெல்லாம் சிலிர்க்கிறதே! பார்த்த உனக்கு எப்படித்தான் இருக்குமோ! ஐயோ! நாங்கள்தான் ஒரு புறமிருக்க பெற்றவர்கள் வயிறு என்னபாடு படுமோ! ஈசா இதுவும் உன் சோதனையோ! கடவுளே! காசு கொடுத்து விடுவது இவ்வளவு கெடுதியா? என்னவோ எல்லாம் ஈசன் செயலென எண்ணி ஆறியிருக்க வேண்டியதுதான்.

அவள்: இதெல்லாம் எங்கள் கையிலிருக்க ஈசன் செயலென்று சொல்லலாமா? ஏதோ விதியினால்தான் பிள்ளை இறந்துவிட்ட போதிலும், "இப்படியாய் நாங்களே கொடுத்து விட்டோமே," என்றல்லவா எங்கள் உயிர் நமமை விட்டு நீங்கும்வரையும் மனம் அடித்துக் கொள்ளும். கொண்டு திரிபவர்களிடம் எல்லாம் கெட்டதாயில்லாவிட்டாலும், நம் கஷ்ட காலத்திற்கு எப்படி இருக்குமோ! நாம் வரமுன் காத்துக் கொள்வதலவா புத்தி.

நான்: நீ சொல்வது முழுதும் சரியே. இதை அறிந்த பின்னுமா இன்னும் என் பிள்ளைகளுக்குத் தீங்கைத் தேடுவேன்! இனி நான் காசு கொடுத்து விடமாட்டேன். ஆனால் காசு காசென்று பிள்ளைகள் தொந்தரவு செய்வார்களே. அதற்கென்ன செய்வது?

அவள்: அதற்கு வழியொன்று நம் ஐக்கிய சங்கத்தார் காட்டியிருக்கிறார்கள்; நீ அறியாயோ?

நான்: அப்படியா! என்ன வழி?

அவள்: குழந்தைகள் யாவரும் காசு கேட்டபடி திரிவார்களென்பதும், அவர்களுக்குத் தெரியும் போலும். அதற்கென்று சல்லிப் பெட்டிகள் செய்வித்துக் கொடுக்கிறார்கள். இதோ பார் என் பிள்ளைகள் நால்வருக்கும் நாலு வாங்கிக் கொடுத்திருக்கிறோம். கூடக் காசு சேர்ப்பவர்களுக்கு ஒரு உபகாரம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறோம். அவர்கள் நீயோ நானோ என்று வாங்கும் காசெல்லாம், சல்லிப் பெட்டியில் போட்டு வருகிறார்கள். இவள்கூட போட்டு வருகிறாள் (என்று சிறு குழந்தையையும் காட்டினாள்.) இப்போ அவர்கள் காசு வாங்கினால் ஏதும் வாங்க வேண்டுமென்று நினைப்பதே யில்லை. நான்தான் அவர்கள் விருப்பியதெல்லாம், வீட்டில் செய்து கொடுக்கிறேன். பிள்ளைகளுக்கு இவ்வயசிலேயே சிக்கன முறையைப் பழக்கி விட்டால், பின் தங்கள் காலத்தில் மிகவும் செட்டாக, நடக்கப் பழகிக் கொள்வார்கள். இந்த வயசில் நல்ல பழக்கம் பழக்காமல் ஊதாரித்தனமாகத் திரியவிட்

டால் வயசானபின் எங்கள் சொல் கேட்பார் களோ? அப்படிப்பட்டவர்தான் பிற்காலத்தில் வரவுக்கு மிஞ்சிய செலவு செய்து கடனாளாய்த் தவிப்பார்கள். இப்பவே சிக்கனமாக நடக்கப் பழக்கிவிட்டால் பின் அவர்கள் எவ்வளவு சிறிய வரவானாலும், அதற்குத் தக்க செலவு செய்யப் பழகிக் கொள்வார்கள்.

நான்: இதனால் ஐக்கிய சங்கத்தார்கு வரும் லாபம்தானென்ன?

அவள்: லாபமா? அறிவிலிகள் கொடுக்கும் ஏச்சும், பேச்சும்தான் அவர்களுக்குக் கிடைக்கும் லாபம். லாபத்தைக் கோரியா அவர்கள் இதெல்லாம் செய்து வருவதாக எண்ணிக் கொண்டாய்? ஐயோ பாவம்! நம்மவர்க்காக அவர்கள் படும் கஷ்டம் கொஞ்சமா? தம் சமூகத்தினரை மேல் நிலைக்குக் கொண்டு வருவதற் காகவல்லவா அவர்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். சிறு பிள்ளைகளைப்போல், பெண்களாகிய நாமும் கண்டதெல்லாம் வாங்கிச் செலவழித்து விடாமல் கையில் கிடைக்கும் சில்லரைகளை யெல்லாம் இந்தச் சல்லிப் பெட்டியில் போட்டு வந்தால், சேர்ப்பதும் தெரியாமல் காசு சேர்ந்து விடும்.

நான்: அந்தக் காசை நாங்கள் மாசம், மாசம் அனுப்பவேண்டுமோ?

அவள்: அப்படி நீங்கள் கஷ்டப்படத் தேவை யில்லையே. அந்தச் சங்கத்தின் காரியதரிசிமார், ஒவ்வொருவர் வீட்டுக்கும் சென்று, அந்தச் சல்லிப் பெட்டிகளைத் திறந்து, பணத்தை எடுத்து அதற்கு ரசீது கொடுப்பார்கள். பின் பணத்தைக் கொண்டுபோய் அதையும் உங்கள் கணக்கிலேயே போட்டு வைத்து பின் உங்களுக்கே கொடுப்பார்கள்.

நான்: அப்படியா! ஆனால் அந்தக் காரியதரிசிமாருக்குச் சம்பளமோ, போகிற செலவோ கொடுக்கிறார்களா? அது எந்தக் காசிலிருந்து கொடுப்பார்கள்.

அவள்: நல்ல கேள்வி கேட்டாய். பாவம்! அவர்கள் சம்பளத்திற்கா வேலை செய்வதாக எண்ணிக் கொண்டாய். அவர்கள் மற்றவர்களைப் போல் வாய்ப் பேச்சுடன் இருந்து விடுபவர்களல்ல. உண்மையில் மன எழுச்சியுடன் சமூகத் தொண்டு புரிபவர்கள் அவர்களே. அவர்களை என்ன விதமாய்ப் பெயரிட்டழைக்கலாமென்று, எனக்குத் தோன்றவில்லை. சும்மா இருந்து கொண்டு காலம் கழிக்கும் அறிவற்றவர் அவர்களை ஏசுவதையும்கூட அவர்கள் கணிக்காமல், எவ்வளவு ஊக்கத்துடனும், கவலையுடனும், பொறுப்புடனும் தங்கள் சகோதரர்களுக காகக் கஷ்டப்படுகிறார்களென்பதை நீ யறிவாயா?

நான்: அப்படியானால் உண்மையில் அவர்கள் நம்மவர்க்காகப் பாடுபடுகிறார்கள்தான். இப்படி யெல்லாம் கஷ்டமெடுத்துத் தங்கள் சுகநயங் கவனிக்காமல், பாடுபடுபவர் நம்மவர்க்குள் இருக்கும் போது, அவர்கள் செய்யும் தொண்டை அலக்ஷியம் செய்ய மனச்சாட்சியுள்ள எவர் மனந்தான் சம்மதிக்கும். இதெல்லாம் நீ எப்படி அறிந்து கொண்டாய்.

அவள்: நான் அவர்களால் வெளியிடப்படும் வருஷாந்த அறிக்கை யெல்லாம் கவனமாகப் பார்த்து வருகிறேன். அத்துடன் எனது நாயகரும் இப்படியானதில் மிகவும் பற்றுள்ளவர். அவர்மூலமாகவும் அறிந்து வருகிறேன். நாங்களும் இந்தச் சங்கத்தைப்பற்றி அவ்வளவாக அறிந்தவர்களல்ல. இப்போ இரண்டு வருடங்களுக்கு முன் அதாவது 1935-ம் ஆண்டு அவர்களால் ஒரு வெளியீடு வெளியிடப்பட்டதலவா? அதைப் பார்த்தபின் நானே நின்று என் நாதரையும் சேரப்பண்ணினேன். அதற்கு முன் என் நாதர் தன் ஆபீஸ் சங்கத்திலேயே சேர்ந்திருந்தார். "தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தாலும் கிட்டிப் பார்த்தால்லவோ அதன் வெட்டவெளி தெரியும்." இப்போ யாழ்ப்பாணத்தவர் சங்கத்தில் சேர்ந்து வேறு ஒன்றும் எங்களால் செய்யாவிடினும் ஏதோ எங்களாலியன்றது செய்து விட்டோமென்ற ஒரு மனச்சாந்தி ஏற்படுகிறது.

நான்: நம் யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்கத்தார் "வழிகாட்டி" யென்று தொடங்கி எல்லாற்றிற்கும் வழி காட்டிக் கொண்டே போகிறார்கள். நானும் இந்த அருமையான வழியைப் பின்பற்றாமல் விடுவேனோ. இப்போதே போய் என் நாதரிடம் சொல்லி மூவருக்கும் மூன்று சல்லிப் பெட்டிகள் எடுப்பிப்பதற்குக் கொடுக்கப் போகிறேன்.

அவள்: நீங்கள் அங்கத்தவர்தானே.

நான்: அங்கத்தவர்தான். ஆனால் எனக்கு இந்தச் சல்லிப்பெட்டி விஷயம் ஒன்றுமே தெரியாதே. என் நாதர் எனக்கு இதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே.

அவள்: உன் நாதர் சொல்லவில்லையா? வேலைக் கஷ்டத்தில் மறந்துவிட்டிருப்பார். இந்தக் காசை அவர்கள் வந்து எடுத்துப்போய் இப்போ (Savings Bank) 'சேஷமநிதி' 'சேஷமிப்பு நிலையம்' போல ஒன்று தொடங்கியிருக்கிறார்களே. அதில்தான் போட்டுவைப்பார்கள். உங்கள்பேரினலுப்சரி இல்லை சேர்த்து வைக்கும் குழந்தைகள் பேரினலுப்சரி உங்கள் விருப்பம்போல போடிக்கலாமாம்.

நான்: அப்படியா தொடங்கியிருக்கிறார்கள்? இது யாவர்க்கும் நன்மையான வழியே.

அவள்: எப்படி நன்மையான, விதமாய் எத்தனை எத்தனை வழிகளாய் அவர்கள் பாடுபட்ட போதிலும், நம் சகோதரரில் எத்தனைபேர் அதைப் பற்றிக் கொஞ்சமும் எண்ணுமல், மற்றச்சங்கங்களில் சேர்ந்துகொண்டு, பெற்றதாய்பார்த்திருக்கப் பிறருக்குத் தானஞ்செய்பவன்போல், யாழ்ப்பாணத்தவர்க்கென இவ்வூரில் நிலைபெற்றிருக்கும் இந்த ஒரே சங்கத்திற் சேராமல், தேசாபிமானம் சிறிதேனுமற்றவர்களாய் இருக்கிறார்கள். இவையெல்லாவற்றையும் உற்று நினைக்கும்போதும் இந்தச்சங்கத்திற்காக இரவு பகலாய் இவ்வளவு கஷ்டத்துடன் பாடுபடும் நம்மவர்மீது எவ்வளவுபரிதாபமும் அனுதாபமும் ஏற்படுகின்றது. ஆடவர்தான் தங்கள் கடமையை உதாசீனம் பண்ணியிருந்தாலும், நம் சகோதரிகளாவது தங்கள் கடமையையும், தங்கள் பிற்சந்ததியாரின் நன்மைடையும் எண்ணித்தங்கள் புருஷரின் தப்பபிப்பிராயத்தை மாற்றி, அவர்கள் சொந்தச்சங்கத்தில் அங்கத்தவராக முடியாதோ?

நான்: நம் சகோதரிகளில் யாரைக்கேட்டாலும் என் புருஷன் என்மேல் மிகவும் அன்புள்ளவரென்று சொல்லுவாளேயன்றி, அன்பில்லாதவர் என்று சொல்லுபவள் ஒருவரையும் காணேம். அப்படி அன்புள்ளவர் அவர்களின் பிற்கால நன்மையைத் தேடாமலிருப்பாரா! அது அப்படி இருக்க பிற்கால நன்மையென்ன வேய! இந்தச்சங்கத்தால் நம் பிற்கால சந்ததியாருக்கு வரும் நன்மைதானென்ன?

அவள்: "ஒன்றுபட்டால் உண்டுவாழ்வே நம்மில் ஒற்றுமை நீங்கி லனேவர்க்கும் தாழ்வே." என்பது அறியாயோ. யாழ்ப்பாணத்தவர் எல்லாரும் எப்போது ஒற்றுமையாக ஒத்து உழைக்கிறார்களோ அப்போதான் நம்மவர் முன்னுக்கு வருவார்கள். "யாழ்ப்பாணத்தவர் ஒற்றுமையுடையவர்" என்று பிறசாதியாரால் மெச்சப்படுவார்கள்.

இன்னும் பார; இச்சங்கத்தில் அங்கத்தினர் கூடப்பணம கூடும். தேவையானவர் பணம் கடனெடுக்க, வட்டி வருமபடி கூடும். அந்த வரும்படி அங்கத்தவராகிய எங்களுக்கே, பிரித்துக் கொடுக்கப்படும். அதில் ஒரு பகுதியைப் பொது நிதியாக்கி, அதைக்கொண்டு எங்கள் பிள்ளைகளுக்குப் பல விதமான தொழில்களைக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்து வருகிறார்களாம். இத்தேசத்தில் இனிமேல் அரசாங்க உத்தியோகம எங்கள் பிள்ளைகளுக்குக் கிடைப்பதரிது. இச்சங்க மூலமாகவே, நம் பிள்ளைகளை நன்னிலைக்குக் கொண்டுவரலாம். இன்னும் நம் குழந்தைகளுக்கு, எதெது செய்ய இயலுமோ, அதெல்லாம் செய்ய உத்தேசித்திருக்கிறார்களாம்.

நான்: அவ்வளவு நன்மையெல்லாம் நம்மவர்க்குச் செய்வதற்கு அவர்கள் முயன்று நிற்க, என் சிலர் இன்னும் சேராமல் இருக்கிறார்கள். பெண்கள் நினைத்தால் ஆகாத காரியமும் உண்டோ! பெண்களாவது ஏன் இன்னும யோசிக்கவில்லை.

அவள்: எடுத்தாப்போல் சொல்லிவிட்டாய் பார்; எல்லாம் அறிந்த நீயே, அந்தச் சங்கத்தைப் பற்றி இவ்வளவு காலமும் சரிவர அறிந்துகொள்ளவில்லையே; அப்படியிருக்க இவற்றையெல்லாம் அறிந்த பெண்கள் நம்மவரில் எத்தனைபேர் இருப்பார்கள் என நினைக்கிறாய்? புருஷர் இதை அறிந்தாலும், பெண்களுக்குச் சொன்னால் அவர்கள் ஒரு வேளை தொந்தரவு போடுவார்களென்று, சொல்லாமல் விட்டுவிடுகிறார்கள். மற்றப்படி இவற்றையெல்லாம் அறிந்திருந்தால் எந்தப்பெண்தான் உதவி செய்யாமலிருப்பாள். பெண்கள், அதிலும் நம் சகோதரிகள், மகா இரக்கமும், தேசாபிமானமும், தங்கள் பிற்கால சீவியத்தில் கருத்தும் உடையவர்களல்லவா?

நான்: அப்படியானால் அச்சங்கத்தில் சேராதவர் யாவரும் அறியாதவர் என்பதா உன் கருத்து?

அவள்: அப்படித்தான் நான் நினைக்கிறேன்.

நான்: அப்படியானால், இப்படியெல்லாம் பாடுபடும் நம்மவர்க்குப் பெண்களாகிய நாமும் எங்களாலியன்ற உதவிசெய்தாலென்ன? நீசொன்னது கேட்டது முதல் என் மனமும் மிகவேதனைப்படுகின்றது. நீயும், நானுமாக, வீடு வீடாய்ச் சென்று அந்தச்சங்கத்தால் வரும் நன்மையையும், இரவு பகல் அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்து வருவதையும், நம் சகோதரிகளுக்கு எடுத்துரைத்து, அவர்களையும் தங்கள் புருஷருடன் சேரும்படி கேட்கலாமே.

அவள்: எனக்கும் அப்படியான சேவைசெய்ய விருப்பம்தான். ஆனால் அறியாதவர் வீடெல்லாம் எப்படிப்போவது? போய் என்ன சொல்வது! ஓகோ! இவர்களும் ஏதோ லாபம் பெற வந்துவிட்டார்கள் என எண்ணினால் (சொன்னால்) எனை செய்வது.

நான்: அவர்கள் எப்படியாவது எண்ணட்டும்! எப்படியாவது சொல்லட்டும்! நம் சமூக நடைக்குப் பாடு படும் நம் சகோதரர், இதெல்லாம் பார்க்காமல் கஷ்டப்படுகிறார்கள் என்று நீதானே சொன்னாய். அவர்களைப்போல் நாமும் ஏன் செய்யலாகாது. அவர்கள் ஏச்சிலும் பார்க்க, நாங்களும் பெண்ணாய்ப்பிறந்தும் எங்கள் சமூகத்தின் நன்மைக்குச் சிறிதாவது பாடுபட்டோமென்ற மனச்சாந்தி பெறுதல்லவா?

அவள்: அப்படியா? எல்லாவற்றிலும் பெருமையடித்துக்கொள்ளும் நீயே இவைடொன்றும் பாராமல் உணர்ச்சியோடு ஆயத்தப்படும்போது,

நான் பின் போவது நல்லதல்ல. எங்கள் பத்தா மாரைக் கேட்டு அவர்கள் விரும்பினால் ஆயத்தப் படுவோம்.

நான்: என்னத்திற்கோ வந்து, கதை வேறு எப்படியே முடிந்துவிட்டது. எல்லாம் நன்மைக்குத்தான். எல்லாவற்றிற்கும் நானும் என் பத்தாவைக் கேட்டுக்கொண்டு நாளைக்கு வருகிறேன்.

அவள்: ஓமோம்! கோயிலடியில் என்னவோ தொடங்கிவிட்டு இன்றைக்கு எல்லாம் மறந்து விட்டேன்.

நான்: இப்போ நேரமாய்விட்டது. எல்லாம் நாளைக்கு ஆறுதலாய்ச் சொல்லுகிறேன், என்று சொல்லி வீடு வந்து சேர்ந்தேன்.

வீடுவர மணியும் 12 அடித்தது. அவசரமாகக் குசுனிப்பக்கம் போய்ப் பார்த்தேன். நான் கவனம்வைத்துப்பார்க்கத் தொடங்கியபின், சமையற்காறன்மிகவும் புனிதமாகவே எல்லாம்செய்து வருகிறான். நான் போகும்போது, சமையல் எல்லாம் முடித்துவிட்டு பாத்திரங்கள் மினுக்கிக் கொண்டு நிற்கிறான். நானும் வீடெல்லாம் சீர் பண்ணிவிட்டுக்குளிக்கப்போனேன்.

நான் குளித்துவர மணிஒன்று அடித்தது. பிள்ளைகள் தகப்பனுடன் வந்து சேர்ந்தார்கள். வந்து சாப்பிடத் தொடங்கியதும் "சிநேகிதி வீட்டில் இன்று என்ன கற்றுக்கொண்டாய்" என்று கேட்டார் என் நாதா. "நான் மட்டும் கற்றுக்கொண்டால் போதுமா? என்னைப்போன்ற எத்தனை பெண்கள் ஒன்றும் அறியாமல் இருட்டறையில் கிடந்து தவிக்கிறார்கள். அவர்கள் புருஷரும் உங்களைப்போல் தானே கஷ்டப்படுகிறார்கள். யாவர்க்கும் நன்மையாயிருக்க அவர்களையும் நம் சங்கத்தில் சேர்த்து நான் கற்றவற்றை அவர்களுக்கும் கற்பித்துச் செய்தாலென்ன" என்றேன்.

அவர்: அவர்களை யார் சேரவேண்டாமென்கிறார்கள்? கற்கவேண்டாமென்கிறார்கள்? அவர்கள் விரும்பாவிடில் மற்றவர்கள் என்ன செய்யலாம். கடவுள் மனுஷரையும் படைத்து, நன்மை தின்மையையும் படைத்து, அதை அறிந்து நடக்கப் பகுத்தறிவையும் படைத்திருக்கிறார். அப்படியிருக்க நன்மையென்று அறிந்துகொண்டு, தின்மையை நாடிப்போபவர்களை என்ன செய்வது. அதற்காக நீயும் அறியவேண்டியதில்லையோ?

நான்: அறியாமலல்ல! இன்று என் சிநேகிதி சொன்னாள், நம் சகோதரிகள் இந்த ஐக்கிய சங்கத்தைப்பற்றி ஒன்றும் அறியாததினால்தான், அச்சங்கத்தில் அனேகர் சேர்ந்து கொள்ளாமலிருக்கிறார்களென்று. அவர்களும் சேர்ந்து நம்மைப்போல் சிக்கனமாகவும் பிற்கால வாழ்வையும் உன்னி நடந்தார்களானால் உங்களைப்போல் எத்தனை புருஷர் சந்தோஷமாக, மனநிம்மதியுடன் வாழ்வார்கள்.

அவர்: தங்கள் சுகசவுக்கியம் அவரவர்க்குத் தெரியாதா?

நான்: உண்மையில் தெரியாததினால்தான் இப்படி இருக்கிறார்களென்று என் சிநேகிதி சொன்னபின், நானும் அப்படித்தான் உணருகிறேன். இல்லாவிடில் வலியவரும் சீதேவியைக்காலாலுதைத்துத்தள்ளுவதுபோல இப்படியான நன்மையெல்லாவற்றையும் அறிந்துகொண்டும் உதறித் தள்ளுவார்களா? பாருங்கள் அந்தச் சங்கத்தில் அங்கத்தவர்க்குச் சல்லிப்பெட்டிகள் செய்வித்துக் கொடுக்கிறார்களாம். இவ்வளவுதூரம் எல்லாம் அறிந்த எனக்கே நீங்கள் அனுப்பற்றி இவ்வளவு நாளும் ஒன்றும் சொல்லவில்லையே! அப்படி இருக்க, வீட்டுக்குள் அடைபட்டிருக்கும் நம் பெண்களைப்பற்றிக் கேட்பானேன். இந்தச் சல்லிப்பெட்டி விஷயமும் என் சிநேகிதி சொல்லத்தான் அறிந்தேன்.

அவர்: ஓமோம்! ஒரு துண்டுப்பிரசுரம் அனுப்பினவர்கள்தான். நான் வாசித்துவிட்டு ஆபீசிலேயே வைத்து விட்டேன். உனக்குச் சொல்ல வேண்டுமென்று நினைத்திருந்தேன். ஆனால் பல வேலைகளினுமாக மறந்துவிட்டேன்.

நான்: என் சிநேகிதி அவள் புருஷன் சங்கத்தைப்பற்றி இன்னும் எவ்வளவெல்லாம் சொல்லிக் கொடுத்திருக்கிறார். அவள் சொல்லச்சொல்ல நான் ஒன்றும் அறியாதவளாய் கேட்டுக் கொண்டு இருந்துவிட்டு வந்தேன். புருஷர் இப்படி சுயநலங் கருதியவர்களாய் இருப்பதாலல்லவா நம் பெண்கள் ஒன்றும் அறியாதவர்களாய் விடுகிறார்கள். எல்லாமிருக்க, எனக்கு மூன்று சல்லிப் பெட்டிகள் எடுப்பித்துக் கொடுங்கள்.

அவர்; சரி; அது நாளைக்கே எடுப்பித்துக் கொடுக்கிறேன். இப்போ நீயும் உன் சிநேகிதியுமாக அந்த ஒன்றும் அறியா உங்கள் சகோதரிகளுக்கு என்ன செய்ய உத்தேசித்திருக்கிறீர்களென்பதை நான் அறியலாமா?

நான்: (நாங்கள் கதைக்கிறதெல்லாம் உடனே சொல்லிப் போடவேண்டும். தாங்கள் மட்டும் எல்லாம் மூடுமந்திரமாக வைத்துக் கொள்ளுவார்கள் என்று எண்ணிக் கொண்டு, இதையும் பேட்டு அறியவேண்டுமே என நினைத்து) நாங்கள் வீடு வீடாகச் சென்று நம் சகோதரிகளுக்கு அறிவித்து வரலாமென்றே யோசித்தோம். ஆனால் உங்கள் உத்தரவு எப்படியோ.

அவர்: என்ன! நீங்கள் எல்லா வீடுகளுக்கும் போகப் போகிறீர்களா? என்று மிகவும் ஆச்சரியத்துடன் கேட்டார். அவர் கேட்ட விதத்தி

லிருந்து உத்தரவு கொடுக்க மாட்டாரென்றே பயந்து விட்டேன். அப்படியிருந்தும் அவர் எண்ணமென்ன என்றுதான் பார்ப்போமே என்று எண்ணியபடி, "ஓம்! அப்படித்தான் உத்தேசித்தோம். உங்கள் யோசனை என்ன? ஏன் அவ்வளவு ஆச்சரியப்படுகிறீர்கள்" என்றேன். "அவரும் அப்படி ஒன்றுமில்லை. உண்மையான மனத்துடன் தான் சொல்லுகிறாயா என்று அறியவே கேட்டேன். எனக்குத் தடையில்லை. அப்படியானால் ஐக்கிய சங்கத் தலைவரையும், நிர்வாகஸ்தரையும் கேட்டுச் சொல்கிறேன்" என்றார்.

நான்: என்ன! இதுகூடவா அவர்களைக் கேட்க வேண்டும். நாங்கள் அங்கத்தவராதலால் நம்மாலியன்ற உதவி சங்கத்திற்குச் செய்யக் கடமைப்பட்டவர்கள்தானே. அப்படியிருக்க அவர்களைக் கேட்பானேன்?

அவர்: என்னத்திற்கும் அவர்களை ஒரு சொல் கேட்டுவிட்டுச் செய்வது நல்லதல்லவா! கொஞ்சம் பொறுத்திருங்கள். அவர்களைக் கேட்டுத்தான் சொல்ல வேண்டும் என்று சொல்லிவிட்டார். இனி அவர்கள் என்ன சொல்லுவார்களோ! என்சினேகிதியின் புருஷன் என்ன சொல்வாரோ! எல்லாம் அடுத்த முறை எழுதுவேன்.

—சரஸ்வதி.

தமிழ் இலக்கணம்.

—:o:—

எல்லாப் பாடைகளிலும் இலக்கண நூல்கள் உள. அவற்றில் தமிழ்ப்பாடையிலுள்ள இலக்கணங்கள் அதிகம் சிறப்புடையனவாய் விளங்குகின்றன. தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம். (Parsing), பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், (Prosody), அணியிலக்கணம். (Figure of Speech) இவைகளைப்பற்றி விபரிக்கும் நூல்கள் தமிழிற் பலஉள. முக்கியமானவை தொல்காப்பியம், அகத்தியம், நன்னூல், தண்டியலங்காரம், நேமி நாதம், வீர சோழியம் என்பவைகளாம்

நன்னூல்—(Nannul).

இந்நூலாசிரியர் பவணந்தி முனிவர். இவரின் வரலாற்றை முற்பகுதியிற் கூறி, பிற்பகுதியில் இந்நூலைப்பற்றி ஆராய்வாம்.

'தன்னூர்ச்சனகையிற் சன்மதி மாமுனி
தந்த மைந்தன்
நன்னூலுரைத்த பவணந்தி மாமுனி நற்
பதியும்
சின்னூலுரைத்த குணவீர பண்டிதன்
சேர்பதியும்
மன்னூபுரத்தி ருவன்ன மின்மே தொண்டை
மண்டலமே."

(படிக்காசுப்புலவர்)

பவணந்தி முனிவர் தொண்டை மண்டலத்தில், சனகாபுரத்தில், பிராமண வருணத்தில், சந்திமதி முனிவரின் குமாரராக அவதரித்தார். இளமைப் பருவத்திலேயே தொல்காப்பியம் முதலிய நூல்களை நன்கு கற்று வல்லவராய் விளங்கினர். ஒருநாள் சீயகங்கன் என்னுஞ் செங்கோல் மன்னன் பவணந்தி முனிவரை நோக்கி, "தொல்காப்பியம் முதலிய பழைய இலக்கண நூல்கள் பேரறிவினர்க்கே புலப்படும் தன்மையனவாயிருத்தலின், இயற்றமிழின் பாகுபாடான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியிலக்கணங்களின் பயிற்சி குன்றியே போவதனால், தமிழ்ராய்ச்சியால் வல்லோரன்றி, எளியோரும் ஓதியுணரும்படி நீவிர் ஓர் இலக்கணநூலை இயற்றித்தரல் வேண்டு"மென்று வேண்டினன். பவணந்திமுனிவர் அதற்கிசைந்து தமிழ் நாடனைத்தும் நன்மை பெறுவண்ணம், தமது நுண்ணிய அறிவினால் அரிய பெரிய விதிகளையெல்லாம் எடுத்து விளங்கத் திரட்டி, முற்காலத்து வழங்கிய இலக்கணங்களுள்ளே, பிற்காலத்து வழங்கா தொழிந்தனவற்றை நீக்கி, முற்காலத்து வழங்காது பிற்காலத்து வழங்கிவரும் இலக்கணங்களைத் தழுவி, உலக வழக்கு, செய்யுள் வழக்குகளோடு சிறிதும் மாறுபடாமல்,

"எழுவகை மதமே உடன் படல் மறுத்தல்
பிறர் தம் மதமேற் கொண்டு களைவே
தா அனுட்டித் தனது நிறுப்பே
இருவர் மாற்கோளொருதலை துணிவே
பிறர் நூற் குற்றங்காட்டல் ஏனப்
பிறிதொடு படா அன்றன் மதங்களலே."

என்ற உடன் படல் முதலிய எழுவகை மதங்களையும் தழுவி,

"குன்றக் கூறல் மிகப்படக் கூறல்
கூறியது கூறல் மாறு கொளக்கூறல்
வழூஉச் சொற்புணர்த்தல் மயங்கவைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று

விரித்தல்

சென்று தேய்ந்திறுதல் நின்று பயனின்மை
என்றிவை யீரைங் குற்றம் நூற்கே"

என்ற குன்றக் கூறல் முதலிய பத்துக் குற்றங்களும் சாராது,

"சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க்கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசையுடைமை ஆழமுடைத்தாதல்
முறையின் வைப்பே உலகமலபாமை
விழுமியது பயத்தல் விளங்கு தாரணத்த
தாகுதல் நூலிற்கு அழகெனும்பத்தே."

என்ற சுருங்கச் சொல்லல் முதலிய பத்து அழகுகளோடும்கூடி,

நுதலிப்புகுதல் முதலிய முப்பத்திரண்டு உத்திகளும் விளங்க நன்னூல் என்னும் அரிய நூலை இயற்றி, அவ்வரசனது சபையில் அரங்கேற்றினர். இன்நூல் தோன்றியபின்னர் என்நூலிலும் சிறந்த தொல் காப்பியம் குன்றின.

"முன்னூலொழியப் பின்னூல் பலவினுள்
நன்னூலார் தமக்கு என்னூலாரும்
இணையோவென்னுந் துணிவேமன்னுக."

என்ற (சுவாமி நாததேசிகர்) பாட்டால இந்நூலின் சிறப்பையுன்னுக.

இன்நூல் இற்றைக்குச் சற்றேக்குறைய 700 வருடங்களுக்கு முன் இயற்றப்பட்டது. பிள்ளை லோகார்ய சீயர் காலத்தில், இற்றைக்கு 450 வருடங்களுக்கு முன், இன்நூல் பிரசித்தமாக விருந்தது.

"நெஞ்சுக்கிருள் கடி தீபம் அடங்கா
நெடும் பிறவி
நஞ்சுக்கு நல்லவமுதம் தமிழ் நன்னூற்றுறைக
ளஞ் சுக்கிலக்கியம் ஆண சாராம்பரசமயப்
பஞ்சுக்கனலின் பொறி பரகாலன்பனு
வல்களே."

என்ற (பிள்ளை லோகார்ய சீயர்) பாட்டையும்உன்னற்பாலதே.

இன்நூலில் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் இரண்டும் கூறப்பட்டுள்ளன. மற்றைய பொருள், யாப்பு அணி அதிகாரங்களும், (Sections) முற் கூறிய அதிகாரங்களைப்போற் செய்யப்பட்டு, முற்காலத்திலிருந்து பிற்காலத்திற் கிடைத்தில வென்று கூறுவர் சிலர். சிலர் இன்நூல் இடையூற்றின் மிகுதியால் முடிவுபெற்றில்லை என்று சொல்லுகின்றனர். எங்ஙனமாயினும் இன்நூலைப்போலத் தெளிவான இலக்கண நூல் வேறு எதுவும் தமிழில் இல்லையென்றே சொல்லவேண்டியிருக்கிறது.

நூலாராய்ச்சி:—

(A) எழுத்ததிகாரம் (Orthography) எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என ஐந்து இயல்புகளாகப் (Chapters) பிரிக்கப்பட்டிருக்கிறது. எழுத்திற்கு இருவகை இலக்கணங்கள் உள. அவை அகத்திலக்கணம், புறத்திலக்கணம் எனப்படும்.

(a) எழுத்தின் அகத்திலக்கணத்தை உணர்த்தும் இயலே எழுத்தியல்பாம்.

(b) எழுத்தின் புறத்திலக்கணம் இரண்டிபதத்தின் இலக்கணத்தைச் சொல்லும் இயலே பதவியல்பாம்.

(c) உயிரெழுத்துக்களை இறுதியிலுடைய நிலை மொழிகளோடு உயிர் முதலும் மெய்முதலுமாகியவருமொழிகள் புணரும் (Combination) விதத்தைச் சொல்லும் இயலே உயிரீற்றுப் புணரியல்பாம்.

(d) மெய்யெழுத்துக்களை இறுதியிலுடைய நிலை மொழிகளோடு, உயிர் முதல் மொழியும் மெய் முதல் மொழியுமாகிய வரு மொழிகள் புணரும் விதத்தைச் சொல்லும் இயலே மெய்யீற்றுப் புணரியல்பாம்.

(e) உயிரீறும் மெய்யீறுமான வேற்றுமை யுருப்புகள் (Case-endings) நிலை மொழி வரு மொழிகளோடு புணரும் விதத்தைச் சொல்லும் இயலே உருபு புணரியல்பாம்.

(B) சொல்லதிகாரம் (Etymology) பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என ஐந்துவகைப்படும்.

(a) பெயர்ச்சொல்லின் (Noun) இலக்கணங்களை உணர்த்தும் இயலே பெயரியல்பாம்.

(b) வினைச்சொல்லின் (Verb) இலக்கணத்தைச் சொல்லும் இயலே வினை இயல்பாம.

(c) பெயர்ச்சொல்லுக்கும், வினைச்சொல்லுக்கும், உரிச்சொல்லுக்கும் பொதுவான இலக்கணங்களைச் சொல்லும் இயலேபொது (Common) வியல்பாம்.

(d) இடைச் சொல்லின் (Conjunction and Particle) இலக்கணங்களை உணர்த்தும் இயலே இடை இயல்பாம்.

(e) உரிச்சொல்லின் (Attributive) இலக்கணங்களை உணர்த்தும் இயலே உரியியல்பாம்.

(C) பொருளிலக்கணம். பொருளாவதுசொல் தொடர்கருவியாக அறியப்படுவது. அது அறம், பொருள், இன்பமும், அவற்றின் நிலையின்மையும், அவற்றின் நீங்கிய வீடுபேறும் என விவரிக்கப்படும்.

பொருள், அகப்பொருள், புறப்பொருள் என இருவகைப்படும்.

(a) அகப்பொருளாவது ஒத்த அன்பினராகிய தலைவனும், தலைவியும் உள்ளத்து உணர்வால் அனுபவிக்கும் இன்பம்.

(b) புறப் பொருளாவது மேற் கூறிய ஒத்த அன்புடையராலேயேயன்றி, எல்லாராலும் அனுபவித்து, அறியப்பட்டு இது இவ்வாறு இருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படும் பொருள்; அது அறமும், பொருளும்.

யாப்பிலக்கணம். (Prosody)

(c) யாப்பாவது பலவகைச்சொற்கள்கொண்டு பொருட்கு இடமாகக் கற்று வல்ல புலவர்களால் அணி பெறப்பாடப்படுவது.

(d) அணியிலக்கணம். (Figure of Speech) அணியாவது செய்யுட்கு அழகுசெய்து நிற்பது.

அலங்காரம்.

நாடெங்கும் வழங்கி வருவன எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமுமே. மற்றைய அதிகாரங்களும் வழங்குமாயின் கற்போர்க்குபொருள், யாப்பு, அணிகளின் பயிற்சிகுன்றிப் போகாமல் எழுத்துச் சொற்பயிற்சி போலவே நின்று நிறைவுறுமென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

—R. M. துரைச்சாமி,
தைப்பிங்.

உபகாரம் வீண்போகாது.

(அணிபூரண ராஜனின் ஓர் கதை.)

—:o:—

மணிபூரணம் என்னும் ஒரு நாட்டை அணிபூரணன் என்னும் ஓர் அரசன் நீதி தவறாமல் செங்கோல் செலுத்தி ஆண்டுவந்தான். இந்நாட்டைச் சேர்ந்த ஓர்காட்டில் கச்சிநாதன் என்னும் வேடன் தன் மனைவியாகிய வச்சிராங்கி என்பவளுடன் வெகு காலமாய் வாசஞ்செய்துகொண்டிருந்தான். இவன் அக்காட்டில் இருக்கும் புரு, மயில், கோழி, காடை முதலான பட்சிகளைப்பிடித்து மணிபூரணத்துக்குக் கொண்டுவந்து விற்று அதனால் வரப்பெற்ற பணத்தைத் தானுந் தன்மனையாளுமாய் ஜீவனஞ் செய்து வருவார்கள்.

இப்படியே ஓர் நாள் இவன் சில பட்சிகளைப் பிடித்துக் கொண்டு அவைகளைப் விற்பதற்காக வழக்கப்படி மணிபூரணத்திற்கு வந்தபோது, அவைகளை அன்று ஒருவரும் வாங்கவில்லை. அதனால் அவன் இரண்டு நாளாய் அந்நகரத்து வீதிகளெல்லாந் திரிந்து கால்கள் சோர்ந்து, பசியால்தளர்ந்து, இரண்டாம் நாள் இரவில், மிக்க துயரத்துடன் ஒரு வீட்டின் தெருத்திண்ணையின்பேரில் படுத்துக்கொண்டான்.

இவ்விதமாய்ப் படுத்துக் கொண்டபடியே, "ஆ! கடவுளே! ஈஸ்வரா! எம்பெருமானே! இதுவுமுமது சோதனையா! நான் எவ்வளவோ கஷ்டத்தின் பயனால் இச்சிறு பட்சிகளைப் பிடித்து வந்தேன். இதில் ஒன்றையாவது ஒருவரும் வாங்கவில்லையே! வாங்காமற் போனதோடு இது என்னவிலை? அது என்னவிலை? என்று வழக்கப்படி விலை கேட்பவரையுங் காணோமே. இரண்டு நாளாய் ஆகாரமின்றித் திரிந்ததனால் தேகமும் அலுத்துச் சோருகின்றனவே. ஒருநாளும் இப்படி நேரிட்டதில்லையே. இதுவென்ன ஆச்சர்யம். இதுவுமன்றிக் காட்டில் என் மனைவியும் ஆகாரத்திற்கு வழியில்லாமல் என்வரவை எதிர் பார்த்துக் கொண்டிருப்பாளே." என்று பலவாறுய்ச்சிந்தித்துக் கொண்டேயிருந்தான்.

இவன் இவ்வாறு துயரத்துடன் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது காட்டில் இவனுடைய மனைவியும், "ஆ! இதுவென்ன ஆச்சர்யம்; மணிபூரணத்திற்குச் சென்ற என் கணவனை இரண்டு நாளாயுங் காணோமே! ஏனை இன்னுந் திரும்பிவரவில்லை. அவர் கொண்டு போன பறவைகள் விலைப்பட்டனவோ இல்லையோ தெரியவில்லையே! ஒருவேளை அவைகள் விலைப்படாமையால் எங்கேயாவது அலைந்து திரிந்து பசியினால் காதடைத்துக்கொண்டு மூர்ச்சையாய் விழுந்தாரோ" என்று இரம்பிய மன அவஸ்தைப்பட்டுக் கொண்டு, அவர் பசியோடு வருவாரானால் உடனே ஏதுங் கொடுப்பதற்காகக் காடுகளெல்லாஞ் சுற்றித்திரிந்து சில கிழங்குகளைச் சம்பாரித்துத் தானுந் தின்னாமல் வைத்துக்கொண்டு, ஆகாரம், நித்திரையின்றி என்நேரமும் அவன் வரவை ஆவலாக எதிர் நோக்கிக்கொண்டே இருந்தாள்.

இவள் காட்டில், இப்படித் துயரப்பட்டுக்கொண்டிருக்க, இங்கே மணிபூரணத் தெருத்திண்ணைமேல் பசியினாலுங் களைப்பினாலும் மெலிந்து கவலையுடன் படுத்திருக்குங் கச்சிநாதனை அவ்வூர்க்காவலாளிகள் கண்டார்கள்.

இவனைக் கண்டவுடன் அவர்கள் சந்தோஷப் பட்டு, "இவன் "கழுவுக்கேற்ற கோமுட்டி." போ னமாசத்தில் இவ்வூரில் நடந்த கன்னக் களவில் குற்றவாளியை இதுவரையில் நாம் கண்டு பிடிக்காமற் போனதற்காக, நமக்கு நாளைய தினம் கொடிய தண்டனை விதிப்பதாய் பிர சித்திப்படுத்தி யிருக்கிறாரல்லவா? நமதரசன். அதற்குமுன் நாம் அந்தக் குற்றவாளி இவன் தானென்று மெதுவாய் இவனைக் காட்டிவிட்டு, நாம் ராஜதண்டனைக்கு தப்பித்துக் கொள்ள லாம்" என்று ஒருவருக்கொருவர் ஆலோசித் துக்கொண்டார்கள்.

அப்படியே அவர்கள் பேசித் தீர்மானித்துக் கொண்டு, இவனைப்பார்த்து, "அடே திருட்டுப் பயலே! நீ தானே அன்றிரவில் கன்னம் வைத் துக் களவாடினவன்? உன்னை எத்தனை நாளாய் எங்கெங்கேயோ நாம் தேடியும் எங்கள் கைக்குச் சிக்காமல், இன்றைய தினம் வகைதப்பி அகப்பட் டுக் கொண்டாய்" என்று அவனை அநியாயமாய்ப் பிடித்து உதைத்துத் தள்ளி கொண்டுபோய் இர வெல்லாம் காவற் சாலையில் வைத்திருந்தார்கள். மறுநாள் காலமே அரசனுக்கெதிரில் அவனைக் கொண்டுவந்து, "ஆண்டவனே! எங்கள் அரசே!! இத்தன்மார்க்கன்தான் அன்றிரவில் கன்னம் வைத்துத் திருடியவன்" என்று சொல்லி எதிரில் நிறுத்தினார்கள்.

மேற்கூறிய விதமாய் காவலாளிகள், தன் முன் னே கொண்டுவந்து விட்ட குற்றவாளியின் முகத் தைப்பார்த்தான் புத்தியுள்ள மன்னன். அவன் இரப்பிய பசியால் களைத்து இருப்பதை அவனின் முகக் குறியால் அறிந்தான். பின் அவ்வரச னவன் தீர்க்காலோசனை செய்து, களவு போன ஆபரணங்கள் விலை உயர்ந்தவைக ளாயிருப்பதால் அவற்றைக் கவர்ந்தவன் இவ் வாறு பசியால் வருந்தவேண்டிய காரணமென்ன வென்றும், "பண்டமோரிடம் பழியோரிடம்" என்பதைப்போல் உண்மையாய்க் குற்றஞ் செய்த வனைப் பிடிப்பதற்குக் கூடாமையால், வழிப்போக் கனாகிய இவனை காவலாளிகள் கொண்டு வந்து விட்டுத், தாங்கள் தப்பித்துக்கொள்ள வகை தே டினார்கள் என்றும் தீர்மானித்துக் குற்றவாளியை விசாரணையில்லாமலே விடுதலை செய்து விட் டான்.

இதன்பேரில் முன்னால் காவலாளிகளுக்காக விதிப்பதாய் அரசன் பகிரங்கப்படுத்தியிருந்த படி, ஐந்துவருஷகாலம் அவைகளைச் சிறையில் வைக்கும்படியாகவும், இந்த வேடன்பேரில் அவர் கள் அக்கிரமாய்க் குற்றஞ் சுமத்தினதற்காக அது இரட்டிப்பாக்கப்பட்டதெனவும் தண்டனை விதித்தான்.

இவ்வாறு தீர்மானஞ் செய்தபிறகு நிரபராதி யாய் இருந்து தன்முன் குற்றவாளியாய் வரநே ரிட்ட கச்சிநாதனின் பசிநோயைப்பார்த்து மன மிரங்கி, உடனே அவன் பசிதீரும்படி அவனுக்கு அறச்சாலையில் அன்னமிடும்படி செய்து, அவ னைத் தேற்றி அனுப்பிவிட்டான்.

அதன் மேல் அவன் காட்டிற்குப்போய் நடந்த சேதிகளை யெல்லாம் தன் மனைவியாகிய வச்சி ராங்கியிடஞ் சொல்லி, இருவருந் தக்கித்து, தங் கள் அரசனின் நடுவு நிலைமையையும், நீதியையும் புகழ்ந்து கொண்டாடி, வழக்கப்படி அவர்கள் அங்கே வாசஞ்செய்து வந்தார்கள்.

இவ்வாறுகச்சில வருஷங்கள் சென்றபின்னர், அணிபூரணராஜன் தன்நாட்டிலுள்ள பயிர்களை யெல்லாம் காட்டு மிருகங்கள்வந்து சேதப்படுத்து கின்றனவென்று குடிகள் தன்னிடம் வந்து முறை யிட்டுக்கொள்ள, ராஜன் "அம்மிருகங்களை இதோ! கொன்றுபோடுகிறேன்" என்று சொல்லித் தன் சேனைகளிற் சிலவற்றை வேட்டைக்குத் தேவையான ஆயுதங்களுடன் ஆயத்தஞ் செய்து கொண்டு, காட்டிற்குப்போனன்.

வேட்டைக்காகக் காட்டுக்குட்பிரவேசித்த அர சனவன் அங்கேயெதிர்ப்பட்ட மான், கடமை, யானை முதலிய பலமிருகங்களையும் அம்புகள் எய்து கொன்று கடைசியாய்த் தன் அம்பிற்குத் தப்பி ஓடிப்போன ஒரு முள்ளம் பன்றியைத் தூரத்திக்கொண்டு வெகு தூரம் வனத்திற்குட் சென்றன்.

அதிகக் கடுமையான வெப்பத்தி னால், குதிரையின்மேல் சவாரிசெய்து கொண்டு கற்களையும், முட்களையும், காறுகளையும், ஓடைகளையும் பாராமல் அவற்றைத் தாண்டிக் கொண்டு, அதிவேகமாய் இரம்பிய தூரம் சேனை களையும் விட்டு வந்தபடியால், தாகத்தினால் களைத் துத் தண்ணீர் இருக்குமிடமுந் தெரியாமல் மூர்ச் சையாகி குதிரையின்மேல் இருந்தபடியேசாய்ந்து ஒரு புதரின் அருகே அரசன் விழுந்து விட் டான்.

அந்தச்சமயத்தில் அவ்வனத்திற் சஞ்சரித்துக் கொண்டு இருப்பவளாகிய முன் சொன்ன கச்சி நாதனின் மனைவி வச்சிராங்கி என்பவள், அங்கே விறகு வெட்டிக்கொண்டிருந்தாள்.

குதிரை வேகமாய் வந்தசந்தடியைக் கேட்டுத் திடுக்கிட்டுத், தன்னைப்பிடிதோ காட்டு மிருகம் பட்சிப்பதற்காக ஓடிவருகின்றதென்றெண்ணி, பயந்து, நெஞ்சங் கலங்கி, "இதற்கென் செய்வேன்?" என்று பக்கத்திலிருக்கும் புதருக்குள் ஒளிந்து கொள்ளலாமென்று அதில் ஓடி ஒளிந்தாள்.

அப்போது புதரினருகில் பெரிய குதிரை நிற்பதையும், அதன்மேல் சவாரிசெய்து வந்தவன் மூர்ச்சையாய் கீழே விழுந்துகிடப்பதையும் பார்த்து, ஓ! ஓ!! நான் இந்த குதிரைவந்த அரவத்தைக் கேட்டுப் பயந்துவிட்டேன்; நான் நினைத்தபடி அது காட்டு மிருகமல்ல என்று மனதைத் தேற்றினாள்.

பின்பு, அவள் சமீபத்திற்போய்பார்த்தபோது அதுயாரோ ஒரு அரசன் ஏறிவந்த வாகனத்தைப்போல இருந்தது. பின்னும் நெருங்கிப் பார்த்தபோது, குதிரையின் காலடியில் இராஜவடிவுள்ள ஓர் மனிதன் இளைப்பினால் மூர்ச்சித்து விழுந்திருக்கக் கண்டாள்.

அவனை இன்னனென்று அறியும்படி உற்றுப் பார்த்தபோது "அவன் இந்நாட்டை ஆளப்பட்ட அணிபூரண ராஜனாக இருக்கலாமோ என நினைத்து, முன்னால் தன் கணவன் மணிபூரண நகரத்தில் அக்கிரமமாய்க் குற்றஞ் சுமத்தப்பட்ட போது, அதையறிந்து, அவனை அக்குற்றத்திலிருந்து விடுவித்து, அவன் பகைஞர்களை அன்னமும் போட்டனுப்பிய மகானுபாவனாக இருக்கலாமென்று நினைத்து, "ஆ! ஆ!! இப்படிப்பட்ட புண்ணிய ஸ்வரூபிக்கும் இவ்வளவு ஆபத்து வந்ததல்லவா" என்று மஹாதுயரப்பட்டாள்!

இனி "தாமதித்தால் மோசம் வரும்" என்று பயந்து, உடனே அதிக வேகமாய் ஓடிப்போய்ச் சற்றுத் தூரத்திலிருந்தவொரு மடுவிலிருந்து கொஞ்சந் தண்ணீர் கொண்டுவந்து, மூர்ச்சையடைந்திருக்கும் அரசனுக்கு அதிக ஜாக்கிரதையாய் உண்பித்தாள்.

அரசனுக்கு தாகத்தினால் உண்டான மூர்ச்சையானதால், நீர் அருந்திய சில நிமிஷத்திற்குள்ளாக, அவன் நித்திரையிலிருந்து விழித்தெழுந்தவனைப்போல் எழுந்து, தன்னுடைய நிலைமையைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டான்.

பின்பு இப்பிராணபாயத்திலிருந்து தன்னைமீட்டவள் முன்னொரு காலத்தில் தன்னால் உபகாரம் அடைந்த வேடனாகிய கச்சிநாதனின் மனைவியென்றறிந்து, "அவன் ஓர் இழிந்த வனசரனுடைய மனைவியாயிருந்தும், முன் அவள் புருஷனுக்கு நாம் செய்த நன்றியை மறவாமல், சமயம் வாய்த்தபோது, அதுவுமல்லாமல் காத்திராப்பிரகாரம் இந்த நேரம் வந்து, அதற்கெத்தனையோ பன்மடங்கு அதிகமான இப்பேருதவியைச் செய்தாளல்லவா? என்று, அவளுடைய நன்றியறிதலை மிகவும் வியந்து

"காலத்தினாற் செய்தநன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது",

என்றபடி "தக்க சமயத்தில் ஒருவருக்குச் செய்யப்பெற்ற உபகாரமானது, அற்பமானதாயிருந்தபோதிலும், அது பூமியைவிட மிகப் பெரிது" என்று திருவள்ளுவ நாயனார் அருளிய பிரகாரம், இவள் செய்த உபகாரத்திற்கு நான் எதையுஞ் சமானஞ் சொல்லக்கூடவில்லையே" என்று சந்தோஷப்பட்டான்.

பின்பு, அரசன் தன்னுடைய புரவிக்கும் தண்ணீர் குடுப்பித்து, அவர்களிருவரையும் தன் பட்டணத்திற்கு அழைத்துக் கொண்டு போய், அவர்கள் வசிப்பதற்காக ஓர் அலங்காரமான மாளிகையைக் கொடுத்து, அந்தக் கச்சிநாதனென்பவனுக்குத் தன்னுடைய சேனாதிபதிப் பட்டங் கட்டி வைத்தான்.

வச்சிராங்கி என்னும் ஓர் ஸ்திரீக்கு உண்டாயிருந்த உபகார சிந்தையையும், அதனால் அவளுக்கும் அவளுடைய கணவனுக்கும் உண்டான மேன்மையையும், கீர்த்தியையும், வாசகர்களே இதனால் அறிதற்கிடமாயிருக்கின்றன.

---

1. தினைத்துணை நன்றி செயினும்
பனைத்துணையாக்
கோள்வர் பயன் றெரிவர்.

2. உதவி வரைத் தன்றுதவி யுதவி
செயப் பட்டார் சால்பின் வரைத்து.

3. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா
முய்வில்லை
செய் நன்றி கொன்ற மகற்க்கு."

சுபம்! சுபம்! சுபம்!

—சுசி.

முற்றிற்று.

---

* * விஞ்ஞான புராணம் * *

[சகோதர, சகோதரிகளே! புராணம், என்றால் "ஏது இக்கிழவிக்கு புராணப்பயித்தியம் அதிகமோ" என எண்ணிவிடாதீர்கள். மேலும், கிழவியார் கந்த புராணமோ, பெரியபுராணமோ, கருடபுராணமோ, பெரிச்சாளிபுராணமோ, தவளைபுராணமோ பாடப்போவ தில்லை. கிழவியார் சொல்லவிரும்புவது விஞ்ஞான புராணம்.]

1. தயவு செய்து நேயர்கள் கி. மு. சுமார் 250 வருடங்களுக்கு முன்பு வரையில், கொஞ் சம் மூளையை ஆராய்ச்சியில் விட்டுப்பாருங்கள். இற்றைக்கு சுமார் 2200 ஆண்டுகளுக்கு முன்பே, கிரேக்க தேசத்தில் ஓர் மனுஷர், இல்லை, இல்லை, ஓர் மஹான் தோன்றியுள்ளார் எனத் தெரிகிறது. அன்னாரின் நாமம் (Archimedes) "ஆர்க்கி மெடஸ்" எனத்தெரிகிறது. "ஏனம்மா அந்தக் காலத்தில் தோன்றிய எவனையோ, எந்தக்காட் டானையோபற்றி, "எவனே செத்தான், ஏனே அழுதேன்" என்பதைப்போல் இழுத்துப்பிடித் துப் பேசுகிறீர்! உமக்குப்புராணப் பயித்தியமும், பழமைப் பித்தும் உண்டுபோலும் என நாங்கள் நினைப்பதில் என்ன பிசகு" என்று சட்டெனக் கேட்டுவிடாதீர்கள். அவரில் கொஞ்சம் சரக்கு இருக்கப்போய்த்தான் இழுத்தேன். அவர்தான் அக்காலத்திலேயே ஓர் நூதனமான கண்டுபிடி ஒன்று கண்டுபிடித்தாராம்; அது எவ்வளவு சக்தி வாய்ந்த பொருள்களையும், ஏன்? கப்பல், இரயில் போன்றவைகளையும் நிலைபெயர்த்து எரித்துவிடக் கூடிய சக்தி கொண்டதாம். இந்த சக்திக்கு ஆங்கிலத்தில் (Principles of specific gravity) என்று சொல்கிறார்கள். அவ்விதசக் தியையே, இன்று ஜெர்மனிய நாட்டின் தலைநக ரான "பெர்லின்" நகரத்தைச் சுற்றிலும், வியா பிக்கச் செய்துள்ளார்களாம். மும்முரமான சண் டைக் காலங்களில், எதிரிகள் ஆகாய விமானங் களோ, சண்டைக் கப்பல்களோ, பெர்லின் நகரத் தின்மேலே பறந்தாலும், அணுகினாலும், மேல்க் கண்ட சக்தியை உபயோகித்து, சுக்கு நூறுக்க வோ, எரித்துவிடவோ செய்யலாமாம். இது கதையோ, உண்மையோ; நேரில் பார்த்தவர்களைத் தேடிப்பிடித்து விசாரியுங்கள். ஜெர்மனிதான் இப்படியென்றால், மற்ற வல்லரசுகள் சும்மாவாயி ருப்பார்கள். அதையும் விசாரித்துப்பாருங்கள்.

2. ஏன் அவ்வளவு காலத்திற்குமுந்திய ஆசா மியின் கதையைப்பேசுகிறாய்? எனக்கேட்பீர்க ளோ! வேண்டாம். பதினேழாவது நூற்றாண் டுக்கு வந்துவிடுங்கள். அங்கே நீங்கள் (Roger Bacon) "ரோகர் பேக்கன்" என்ற ஓர் ஆங்கில ஆசாமியின் பெயரைக் கேள்விப்படலாம். அவ ரென்ன செய்தார். அவர்தானம்மா, டப்பு, டிப்பு, பிறகு என்னென்னவோ மாதிரியெல்லாம் காது செவிடுபடும்படிசத்தத்தையுண்டாக்குகிறதே அது வும், வேறு என்னென்னவோ வெல்லாம் கண்டு பிடித்தாராம். "என்ன கிழவி, இன்னதெனச் சொல்லாமல் வளத்துரே" என்று கேட்கிறீர் களா? இதோ சொல்லிவிடுகிறேன். அவைகள் தான், அவர் கண்டுபிடித்தது வெடி மருந்தாம், பூதக்கண்ணாடியாம், உலோக வகைகளாம் என்ப தாக என்னென்னவோ சொல்கிறார்கள். இந்த இழவு சாமான்களைக் கொண்டு, முசோலினியும், கிட்லரும் என்னபாடு படுகிறார்கள் என்று நீங் கள்தான் அறிவீர்களே! அபிசீனியர்களிடமும் இந்த கருவிகளெல்லாம் இருந்தால், முசோலினி பாடு முட்டையிடவேண்டியதுதானே. "பூனைக் குத்தான் பொல்லாத காலமாக்கும்; ஆனைக்கும் ஆகாத காலம் வரும்" என ஓர் சோதிடர் நேற்று சொல்லிக்கொண்டிருந்தார்.

3. சோதிடர்களைப்பற்றிய எண்ணத்தில் மூழ் கினவர் தெளிந்தெழுமுன், 14-வது நூற்றாண்டு சம்பவத்திற்கு மூளையை திருப்பிவிடுங்கள் மற் றையோர். அங்கே என்னதோன்றுகிறது. கொஞ் சம் யோசியுங்கள். ஓ! பொருங்கள்! ஓர் ஆசாமி யிருக்கிறார். அவர்தானம்மா இங்கிலாந்து ஆசாமி. "கென்ட்" என்ற ஊரிலேபிறந்தாராம். அவர் திருநாமந்தானே! அதுதான் "வில்லியம் காக்ஸ்டன்" (William Caxton) என்பது. ஏன் வெள்ளைக்காரரை இழுப்பான்? என்பீர்க ளாக்கும். அவரில்லையானால் புத்தகம், புத்தக மாக அலமாரிகள் நிறைய அடுக்கிவைத்துக் கொ ள்ளமுடியுமா? நமது வழிகாட்டியைத்தான் 20 காசுக்கு விற்கமுடியுமா? "என்ன கிழவி அளக்கி றாய்" எனச்சலிப்புபோலும்! சொல்லிவிடுகிறேன். அவர் கண்டவற்றின் விளைவுகளே இக்காலத்திய அச்சு இயந்திரங்களாம். சிலர் சொல்கிறார்கள்,

ஓ! கிழவிக்கு ரொம்பத் தெரியுமாக்கும்! முதன் முதலில் அச்சு இயந்திரங்கள் கண்டது சீனதேசந்தான் என்று. வெள்ளைக்காரர்களெல்லாஞ் சொல்கிறார்கள், "காக்ஸ்டன் துரை"தான் கண்டு பிடித்தாரென்று. எப்படித் தெளிவது. வேண்டுமானால் பாஞ்சால சிங்கம், "சுட்டேன், சுட்டேன், குண்டுள்ளவரையிலும் சுட்டேன்" என்ற மார் தட்டி, வீர முழக்கஞ்செய்த வீராதி வீரர் (இ)டயர் துரையை பஞ்சாயங் கோரலாமே. மேலே இல்லே, பிள்ளையழுகிறது; மணிநாலாச்சு; கோப்பி போடவேண்டுமென்கிறீர்களோ! போங்கள்.

4. போகிறவர்கள் போகட்டும். இருக்கிறவர்களுக்கு இன்னொன்று சொல்லவிருப்பம். கொஞ்சம் 15-வது நூற்றாண்டின் முற்பகுதிக்கு ஒட்டுங்கள் ஆராய்ச்சி அசுவத்தை. "இதென்ன இக்கிழவி, நூற்றாண்டுகளாக அலசிக்கொண்டே போகிறாள்" என்கிறீர்களாக்கும். என்ன செய்வது? கொஞ்சம் யோசனையைத்தான் செலுத்துங்களேன். தோன்றுவதென்ன? நான்தான் சொல்லவேண்டுமாக்கும். சரி. போலந்து நாட்டிற்குப் போகட்டும் ஆராய்ச்சி. ஆ! ஆஹா! ஆமாம். ஒருவர் இருக்கிறார். ஓகோ! இப்பொழுதுதான் தோன்றுகிறதாக்கும்! ஆமாம்! ஆமாம்!! "நிக்கலஸ் கோபர்நிகஸ்" (Nicolas Coparnicus) வானசாஸ்திரி. இவர்தான் நமது பெரிய ஜன்ம விரோதி. நமது மதம், சாஸ்திரம், வேதம், புராணம், இதிகாசம் முதலான எல்லாவற்றையும் பொய்யாக்கியவர். நமது புராண இதிகாசங்களிலே, சாஸ்திரங்களிலே, சூரியனர் ஏழுபச்சைப் புரவிகள் பூட்டிய இரதத்திலே ஏறிக்கொண்டு ஒவ்வொரு நாளும்கீழ்கடலிலேதோன்றி நமக்கு மேலாகப் பிரயாணஞ்செய்து, மேல்கடலில் மறைகிறார் என எழுதிவைத்திருக்கிறார்கள். மேலும் டியன் படக்காட்சிசாலேதான் உங்களுக்குப் புதிதன்றே! அதில் நளாயினி போட்டசாபத்தால், சூரியன் கீழ்க்கடலிலிருந்து வெளியே வரமுடியாமல், குதிரைகளும் தத்தளிக்கத் திண்டாடிற்கவில்லையா? இதையும் கண்ணாரக்கண்டோம். அப்படியிருக்க, இந்த ஆசாமி, ரொம்பக்கண்டவர்போல், "சூரியன் பெரிய நெருப்புக்கோளம்; அதை பூமியே சுற்றுகிறதன்றி, சூரியன் பூமியின் பேரில் சஞ்சாரஞ்செய்யவில்லே; அது தன்னைத் தானே சுற்றிக்கொள்கிறது" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாராம். அதைக்கட்டிக் கொண்டு மாறடிக்கிறார்கள் இக்கால ஆசாமிகளிற் சிலர். எங்கள் மத, சாஸ்திர, சம்பிரதாய விரோதியைப்பற்றிய எண்ணத்தை எங்களுக்கேன் கொண்டுவந்தாய் எனக்கோபிக்கிறீர்களாக்கும். போடுகிறேன் தோப்புக்கரணம். எண்ணிக்கொண்டேயிருங்கள்.

5. அவர்கள் எண்ணட்டும். ஏனோர் வாருங்கள் போவோம் 18-வது நூற்றாண்டிற்கு. ஆங்கோர் ஆசாமி இருக்கிறார். "'இருக்கிறார்' என்று நிகள்காலத்தைக் காட்டுகிறாயே கிழவி! உன் மண்டையில் இருப்பது மூளைதானே? மேலே 18-வது நூற்றாண்டிற்கு ஆராய்ச்சியைப் புகவிட்டாய்! அறுபதிற்கு மேல் இறுகிறுப்பு என்பார்களே, அப்படியல்லவா உன் செய்கை இருக்கிறது." என மண்டையை உடைத்துக்கொள்ளாதீர்கள். இன்னம் அவ்வாசாமியின் புகழுடம்பு அழியவில்லை என்பதைச் சிந்தித்தால் என்னை மன்னிப்புக் கேட்பீர்களென்பதை யறிவேன்.

இவர் ஆஸ்டிரேலியா நாட்டில், 'பிரஸ்டன்' என்ற ஊரிலே பிறந்தவராம். வித்வக் காய்ச்சலால், ஏனைய புலவர்களால் ஏவப்பட்டு, கம்பருக்குத்தம்பியாகசோழமன்னன் காணும்வண்ணம் நடித்தவரின் மரபிலுதித்த மதிவல்லுனராம். "சர் ரிச்சர்ட் ஆர்க்ரைட்" (Sir Richard Arkwright) என்ற நாமம் பூண்டவராம். இவர் கொண்டகோலத்தையே இன்று ஜப்பான்கொண்டு உலகப்போட்டியில் தலைத்தெறிக்க ஓடித்தவிக்கிறது. என்னகண்டார் என்பதைச் சீக்கிரம் சொல்லிவிடவேண்டுமோ? ஏன்! பொருங்களேன். நில்லுங்கள்! நில்லுங்கள்!! போய்விடாதீர்கள். சொல்லிவிடுகிறேன், அதுதான், இவர்கண்டது இயந்திரத் தரிகளாம். டெக்கா 'மஸ்லினே' இங்கிலாந்து விழுங்கிற்று. இன்று இங்கிலாந்து பாப்பிளினை மட்டுமன்று, புண்ணிய நகர் காசியின் கண்ணியமிக்க பட்டுப்புடவைகளையும் ஜப்பான் விழுங்கி ஏப்பமிட்டு, ஒன்றரை வெள்ளிக்கு, ஒரே சலவையில் சாயம் வெளுக்கிற போலிப்புடவைகளை நமது அம்மாமார்களுக்குக் காட்டி ஏமாற்றி வருகிறது. நமது நாட்டின் நெசவுத்தொழிலுக்கு உலைவைத்த ஆசாமியின் பெயரை இழுத்துப்பேசி, எங்கள்வயிற்றெரிச்சலை என் கிளப்புவான் எனக் கிழவியின்பேரில் வசை புராணம் பாடிவிடாதீர்கள். நல்லார் செய்கைகளையும், பொல்லார் செய்கைகளையும் சீர்தூக்கிப் பார்த்தாலே, நன்மை, தீமைகளை யுணர்ந்து, நல்வழிப்பட ஏதுவாகும். நன்மை தீமைகளையறிய ஓர் சங்கங் கூடுங்கள். ஆராய்ச்சியில் அமோகமாய் ஈடுபடுங்கள்.

6. அச்சங்க மெம்பர்கள் ஆராயட்டும். மற்றுமுள்ளோர் விடுங்கள் ஆராய்ச்சி இரதத்தை 19-வது நூற்றாண்டின் முற்பகுதிக்கு. இங்கே யார் தோன்றுகிறார்? இவர்தான் மிக முக்கியமானவர். நமது மாட்டு வண்டி சாரத்தியத்தில் மண்ணைப் போட்டவர். தென்னப்பிரிக்காவிலே, நெட்டால் பிறதேசத்திலே, நியூகாவில் என்ற இடத்திற்குச் சமீபமாக உள்ள 'வைலாம்' என்ற விடத்

தில் பிறந்தவரென எவரோ சொல்லக் கேள்வி. இவரை 'ஜார்ஜ் ஸ்டீபன்சன்' (George Stephenson) என அழைக்கிறார்கள். இன்றைக்கு நினைத்த மாத்திரத்தில் தலை தெறிக்கும் வேகத்தில் ஓடும் இரயில்வேக்களும், மோட்டார்களும், பருந்தினும் வேகமாய்ப் பறக்கும் ஆகாய விமானங்களும், மீனினும் கடிதாய் மிதந்தோடும் கப்பல்களும், தவளையினும் தலைகீழாய்த் தாவி மூழ்கும் நீர்மூழ்கிக் கப்பல்களும் இவர் தயவாலேயே உண்டாக மார்க்கமாயிற்று எனச் சொல்வதில் மிகையொன்றுமில்லை யெனவே தோன்றுகிறது. முதன் முதலில் நீராவி இயந்திரங்கண்டறிபுணர் இவர்தானும். பார்த்தீர்களா இன்றைய உலக நிலையை. வேகத்தில் முதன்மை பெற்றது 'மனம்' என்பது நமது சாஸ்திர முடிபு. இந்த ஆசாமி கண்ட முடிபு அதனுடன் போட்டியிடுகிறாற்போலிருக்கிறதா என்பதை ஆராய்ந்து ஓர் முடிவுக்கு வர பிரயாசைப் படுங்கள்.

7, வேகத்தின் முடிவை ஆராயும் பிரயாசையிலீடுபட்டிழலும் பெரியோர்களிடம் உங்களுக்கென்ன வேலை. போவோம் 19.வது நூற்றாண்டின் பிற்பகுதிக்கு. இங்கே தோன்றுபவர் சில சார்பினர்களுக்கு மிகவும் வேண்டியவர். அச் சார்பினர் யாவர்? அந்த ஆசாமிதான் யார்? என்பதையறிய உங்களுக்கு அதிக ஆசையிருக்குமென கிழவியும் அறிவாள்தான். இருப்பினும் நீங்களாகவே ஏன் அறியமுயலக்கூடாது? "எங்களை ஏன் அலக்கழிக்கிறாய்! நீ தெரிந்தவள் சொல்லேன்" என்கிறீர்களாக்கும். சரி ஆசாமிகள், மோட்டார் விபத்துக்களுக்காளாகி எலும்புகள் நொறுங்கியவர்களும், முரட்டுத்தனத்தால், களிகளால் மண்டையோடுகளை உடைத்துக் கொள்ளும் முரடர்களும், இவ்வகை இனத்தைச் சாந்த இன்னும் பலருந்தான். ஆசாமியாரென்பதை, இந்த ஆசாமிகளிடம் கேளுங்கள். அல்லது பெரிய வைத்தியசாலையின் தலைமை வைத்தியரிடமாவது கேளுங்கள். இவர்களையெல்லாம் எங்கே தேடிப் பிடிப்பது; நீதானே எதிரிலிருக்கிறாய் சொல்லமாட்டாயாக்கும்? வேண்டாம் சலிப்பு. இதோ சொல்லி விடுகிறேன். அந்த ஆசாமி, மேலே சொன்ன ஆசாமிகளின் இரண சிகிச்சை காலக்கோரக் குழறல்களைக் கண்டு, கனிவெய்தி, ஓர் மயக்க மருந்து கண்டு பிடித்தாராம். அதுதான் உங்களுக்குத் தெரியுமே. 'குளோரபாம்.' இவர் பெயர் (Sir James Young Simpson) 'ஸர் ஜேம்ஸ் யங் சிம்ஷன்' என்கிறார்கள். ஸ்காட்லந்து நாட்டவராம். பாருங்கள் 'குளோரபாம்' செய்யும் மகிமையை.

8. 'குளோரபாம்' மயக்கத்தை எண்ணி மனமயக்கங் கொண்டவர்கள் தெளியுமுன் வாருங்கள் ஏனையோர் நமது நூற்றாண்டிற்குப் போய் விடுவோம். "என்ன, கிழவி 20-வது நூற்றாண்டுக்கு வந்துவிட்டாயே; இதில் அநேகமாய் நாங்கள் கண்டதுங் கேட்டதுந்தானே! புதிதாய் என்ன சொல்லப் போகிறாய்" எனக் கேட்பீர்களோ? புதிதென்ன! பழமைதான். புதுமைபோல் தோன்றும். 'சொல்லேன்; நீட்டிக்கிறாயே' என மனப் புழுக்கம் போலும்! இந்த 20-வது நூற்றாண்டிலும ஒரு அற்புத ஆசாமி இருக்கிறார். 'தாமஸ் ஆல்வா எடிஷன்' (Thomas Alwa Edison) என்பது பேர். கிராமபோன் என்ற தனித்தியக்கும் சங்கீதக் கருவிப் பெட்டியைக் கண்டவர். இது வளர்ந்து, வளர்ந்து, ஓடியனில் சுப்புலக்ஷ்மி பிரத்தியக்ஷமாகத் தோன்றிப் படிக்க, காதால் கேட்டு ஆனந்திக்கிறோம். சுப்பையர் பாகவதர் பாடிய 'காம சுந்தராங்கி' சங்கீதவமைப்பைக் கேட்பவர்கள் கேட்கட்டும். இந்த ஆசாமி (Edison) பிறந்த நாட்டை மற்றவர்களுக்குச் சொல்கிறேன். இவர் நம் நாட்டவரல்ல. "இதுதான் எங்களுக்குத் தெரியுமே! நீ இதுவரை அளந்ததிலிருந்து, இன்னுமோர் எந்தக் காட்டானைப்பற்றியாவது சொல்வாய் என்று" என்பீர்களாக்கும். ஆமாம். இவர் அமெரிக்கா நாட்டிலே தோன்றியவர். "வீணை, பிடில், தம்புரு, யாழ் முதலிய பண்டைய தமிழ் சங்கீதக் கருவிகளிருக்க, எங்கேயோ பிறந்தவன் கண்டு பிடித்த 'கிராமபோன்' வாத்தியத்தைப் பற்றி கிழவி சொல்ல வந்துவிட்டாள்," எனக் கோபிக்கிறீர்களோ? உங்கள் கோபம் என்னை என்ன செய்யும்! "எத்தனைபேர் உங்கள் வீட்டுகளில், யாழையும், வீணையையும் வைத்து மீட்டுகிறீர்கள்? வீடு தவறாமல் கிராமபோன்தானே இருக்கிறது" என நான் மட்டும் கேட்காமல் விட்டுவிடுவேனே! "சரி! கோபம் வேண்டாம்; இதுவரை வெளிநாட்டு ஆசாமிகளைப்பற்றியே சொல்லிவந்தாயே; ஏதும் நம்மவர்கள் செய்யவில்லையா? அவைகளைப்பற்றி உனது ஆராய்ச்சிக்கு ஏதும் எட்ட வில்லையா? ஏதாவது நமது நாட்டைப் பற்றியும், நம்மவர்களின் விசேஷ செய்கைகளைப்பற்றியும் சொல்லேன்" என்று கேட்கிறீர்களாக்கும். கேட்டாலல்லவோ சொல்வேன். "சட்டியிலிருந்தாலல்லவோ அகப்பையில் வரும்" என எண்ணிவிடாதீர்கள். ஆனால் இன்று முடியாது. தொண்டை வரண்டுவிட்டது. உங்கள் கோபி வேண்டாம். சீனிவாசக ஐயங்கார் கடை ஐஸ்கோபி குடிக்கப் போகிறேன்.

தொடரும்.

கடிதம்.

அன்புமிக்க பத்திராதிபர் அவர்களுக்கு.

ஐயா! இப்போ வரவர இவ்வழிகாட்டி எனப் பெயர் பெற்ற இந்தப் பத்திரிகையானது இரம்பவும் மேன்மையாகவளர்ந்து வருகின்றது. இதை உற்று நோக்குங்கால் நாமும் ஏன் இதற்குள் ஈடுபடக் கூடாது நன்ற எண்ணம் பிறந்து மனதை வாட்டுகிறது.

எங்கள் அருமைச் சகோதரிகள் பலவிதமான சொற் பொருள்களையும் எழுதியிருந்தார்கள். "இழுக்குகடைய பாட்டிற்கிசை நன்று சாலும்." என்றமாதிரி ஒன்றையே எழுதாமல் ஒருவர் தம் அநுபவத்தைப்பற்றியும், இன்னொருவர் தம் அறியாமையினால் தாம் நடந்து வருவதைப்பற்றியும், வேறு சிலர் இன்னும் அரிய விஷயங்களைப்பற்றியும் எழுதி இருந்ததை ஒருதரமல்ல பலதரமுந் திருப்பித் திருப்பி அதன்கணுள்ளவற்றை வாசித்துப் பார்த்துத் தேனமுதருந்தலானேம்.

இனிமேல் எங்கள் சங்கம் முன்னேற்றமடைந்து இடையறாது பெருகி வரும் என்பதற்கு ஐயமில்லை.

சகோதரிகளே! நீங்கள் எழுதியதைப்பார்த்து இரம்பவும் வியந்தேம். மேன் மேலும் இதைக் குன்றவிடாது. "அடம்பன் கொடியுந் திரண்டால் மிடுக்கு" என்றபடி, எல்லாருமாகச்சேர்ந்து எவர் எவர் மனதில் எது எது உதிக்கின்றனவோ அதைச் சிறிது நேரம் இருந்து ஆராய்ந்து நிந்து எழுதி, இப்பத்திரிகையை முன்வரச் செய்யவேணும்.

நேயர்களே! அதிகமெழுதுவதற்கு மனச்சக்தி யில்லை. இதன்கீழ் ஓர் சிறுகதை எழுதலானேன். ஆனால் இது என் சிறுபிராயத்தில் படிக்கும்பொழுது எழுதிய ஓர் வியாசம். வேறு பலவிதமாக எழுதுவதற்கு மதியெனுங் கோலை ஊன்றினேற்தான் அது தெள்ளிதிற் புலப்படும். ஆகையால் இதில் ஏதும் சொற்பிழை, பொருட்பிழை இருந்தால் எமது பத்திராதிபரும், வேறு எமது வாசகரும் மன்னிப்பீர்களாக.

இப்படிக்கு தங்கள் அன்புள்ள,

சுசி.

கடிதத்தில் கண்ட கதையை 14-ம் பக்கம் பார்க்க.

மதிப்புரை.

"மலாயா சரித்திரம்" என்ற ஓர்புத்தகம் வரப்பெற்றேம். இப்புத்தகமானது கிள்ளான் வாசியான ஆசிரியர் கா. கந்தையாபிள்ளை அவர்களால் எழுதப்பட்டது. ஆசிரியரைப்பற்றி நாம் ஏதும் சொல்லப்புகின் பெற்றதாயிடம் குலகோத்திரம் கேட்டவன் கதையாகவே முடியுமென அஞ்சுகிறேம். ஆசிரியர் தமிழ்த்தாயின் சேவையிலீடுபட்டு, மலாய்நாட்டில் வசிக்கும் ஆங்கிலங்கற்காத தமிழர்களுக்கு மலாய்நாட்டின் உண்மை சரித்தத்தை தெரிந்துகொள்ளும்படியான சந்தர்ப்பத்தை இப்புத்தகமூலம் ஏற்படுத்துக்கொடுத்துள்ள உத்தமப்பணியை நாம் போற்றாமலிருக்க முடியாது. ஆசிரியர், பல நூலாராய்ச்சிகளுடன் மலாயாவில் தனக்கேற்பட்ட சொந்த அநுபவத்தையுங் கூட்டி, நூலை மிகவும் திறம்பட வரைந்துள்ளார்கள். நடை மிகவும் இனிமை பயப்பதாகவும், பெண்களுக்கும், மாணவ, மாணவிகளுக்குப்பெரிதும் பயன் படுவதாகவும் இருக்கிறது. சர்க்கார் தமிழ்ப்பள்ளிக் கூடங்களிலும், இப்புத்தகத்தை பாடபுத்தகமாக ஏற்றுக்கொள்வார்களெனவே நம்புகிறேம்.

இவ்வாசிரியர் தமிழ்த்தாய்க்குச் செய்த சேவையைப்போற்றி எமது மனமார்ந்த வந்தனத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

புத்தகம், ஆசிரியர் கா. கந்தையாபிள்ளை அவர்களிடமும், ஏனைய புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

விலை $2.00. தபால் கூலி 12 காசு.

C. O. D. யில் $2·50

ப—ர்.

மணித்திரள்.

உயர்ந்த ஜாதியென்று நினைத்து எவரையும் தொடாமலிருப்பதினாலேயே மனச்சுத்தமடையாது; அறிவு வந்துவிடாது; இந்திரிய சேஷ்டையும் போகாது. மதக்குறியணிந்து கோவிலுக்குப்போய் கன்னத்திலடித்துக் கத்தினாலும் மனச்சுத்தியாகாது; இந்திரிய ஆதிக்கம் குறையாது. ஆயிரங்குடும்பங்களை அழுதியாக்கி ஓர் ஆட்டு மாமிஷத்துண்டைக்கண்டு ஜீவகாருண்யம், என்று தேகத்தைக்குறுக்கிக் கொண்டாலும் இரக்கம் வந்துவிடாது; இந்திரியங்களின் கொடுமை போய்விடாது. விசாரணை செய்துபார்த்தாலே அறிவு புலப்படும் அப்பொழுதுதான் மனிதன் மற்ற ஜீவராசிகளில் மேம்பட்டவனைக் காட்ட முடியும். —ஓர் பெரியார்.